5-6

உ

ஓம் தத் சத்.

ஸ்ரீ பரப் பிரஹ்மனே நம:

ஸ்ரீலஸ்ரீ இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் அருளிய

"அருள் மொழிகள் 180"



இஃது

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும்

ஆனந்தாஸ்ரமத்தின் முதலாவது தலைவர்

ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமி

அவர்களின்

8-ஆவது ஆண்டு குருபூஜையின் போது

2-வது தலைவர்

திருவாளர் V. R. S. இராமசாமி செட்டியார்

அவர்களால் இலவசமாக வெளியிடப்பட்டது.

9031
R65

ந்தாம் பாகம்

-6—1988 வெள்ளிக்கிழமை

ஸூ வைகாசி மீ 28-தேதி

5-6
...காவிலூர் ஆண்டவர்
No. 9031
R65
நூலகம், கோ...ூர்

உ

ஓம் தத் சத்.

ஸ்ரீ பரப் பிரஹ்மனே நம

ஸ்ரீலஸ்ரீ இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் அருளிய

"அருள் மொழிகள் 180"



இஃது

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் ஆனந்தாஸ்ரமத்தின் முதலாவது தலைவர்

ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமி

அவர்களின்

8-ஆவது ஆண்டு குருபூஜையின் போது 2-வது தலைவர்

திருவாளர் V.R.S. இராமசாமி செட்டியார்

அவர்களால் இலவசமாக வெளியிடப்பட்டது.

ஐந்தாம் பாகம்

தேதி 10—6—1988 வெள்ளிக்கிழமை

விபவ ௵ வைகாசி ௴ 28-தேதி



முகவுரை

5-6

ஸ்ரீ நாராயண சரஸ்வதி ஸ்வாமிகளின் எட்டாவது குருபூஜையை ஒட்டி 5-ஆவது பாகமாக "அருள் மொழித் திரட்டு 180" என்கின்ற மிக அருமையான புத்தகம் வெளியிடப்படுகிறது. ஆனந்தாஸ்ரமத்தின் குரு முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோம. கோபாலசாமி சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன் ஆசிரமத்தின் இரண்டாவது தலைவர் திருமிகு. V. R. S. இராமசாமி செட்டியார் அவர்களின் பெரு முயற்சியால் இவ்வரிய நூல் புத்தக வடிவிலே வெளி வந்திருக்கிறது.

மக்கள் பெற விரும்புவது இன்பம். வெறுப்பது துன்பம். அதுமட்டு மல்ல, மக்கள் மிகவும் விரும்பி ஏற்க விழைவது சர்வதுக்க நிவர்த்தியும், பரமானந்த பிராப்தியுமே ஆகும். அதற்கு வழிகாட்டுவதே இவ்வரிய அருள் மொழிகள் தான் என்றால் அது மிகையல்ல. ஆன்மீகச் செல்வம் மனிதனின் முகத்தைப் பொலிவுறச்செய்கிறது. பரிவு, பண்பாடு ஆகியவற்றைத் தோற்றுவிக்கிறது. உடல் நலனுக்கு வேண்டிய உணவிலும், மனநலனுக்கு வேண்டிய கல்வியிலும் மேலானது ஆன்மாவை நலப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமி அவர்களால் உய்த்து உணரப்பட்டு அந்த உணர்வை மக்கள் அனைவரும் பெற வேண்டும். அவர் அடைந்த ஆனந்தானுபவத்தை மக்களும் அடைய வேண்டும் என்ற ஆன்ம நோக்கோடு வெளியிடப் படும் இத்தகைய அரிய நூல்கள் மக்களுக்கு பெரும் பயனை அளிக்கவல்லது ஆகும். ஆன்மா எப்போதும் பரிசுத்தமாக இருக்கிறது பனித்துளியைப் போல. ஆன்மாவின் வழி நடந்தால் அதுவே கடவுளின் வழியாகும். ஆன்மாதான் கடவுள்.

இந்நூல் ஆன்ம நேயர்களுக்கு சுவைக்கச் சுவைக்கத் தித்திக்கும். கற்கண்டின் சுவையினைப் போன்றதாகும். மேலும், மேற்கண்ட பெரியோர்களின் அருளாசியினால் ஆனந்தாஸ்ரமத்தின் மூலம் வேதாந்த சிரவணமும், பக்தர் களுக்கும் ஆன்மீக அன்பர்களுக்கும் நல்லன கிட்டி வரு கின்றன. இவ் வரிய நூலுக்கு முகவுரை எழுதும் பெரும் பாக்கியத்தை வழங்கியமைக்காக நான் மிகவும் மகிழ்வுடன்

நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். குருபூஜையை ஒட்டி மூன்றாவது இந்து ஆன்மீக பண்பாட்டுப்பயிற்சி முகாம் 10, 11 மற்றும் 12ம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மூன்று நாட்களுக்கு நடக்கவுள்ளது. குறிப்பாக 17 வயதில் இருந்து 20 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி முகாமானது மிக்க பலனை ஆத்மார்த்தமாக அளிக்க வல்லது.

''காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தில் மானப் பெரிது''

என்ற தெய்வப் புலவரின் நல்வாக்கிற்கிணங்க, தக்க தருணத்தில் காலமறிந்து மாணவர்களின் மனதில் விதைக்கப்படும் இந்த விதையானது, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி இம்மாணவச் செல்வங்களை வருங்காலத்தில் நல்ல பண்பாளர்களாக நல்ல குடிமக்களாக, ஆன்மீகச் செல்வர்களாக வளர நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இந்நூலில் ''தான தருமங்கள் செய்க'' ''பன்னிரு வாக்கியங்கள்'' மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியாரின் ஆன்மீகப் பாடல்கள் முதலியன சேர்ந்திருப்பது ஆன்மீகத் துறையில் உள்ளவரின் மனம் பண்பட உதவும்.

இத்தகையதொரு அருமையான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் ஆனந்தாஸ்ரமத்தின் குருமார்களாகிய ஸ்ரீலஸ்ரீ இராமசாமி சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ சதாசிவானந்தா சுவாமிகள், அவர்தம் வழித்தோன்றல் *ஸ்ரீலஸ்ரீ* தேஜோமயானந்தா சுவாமிகள், *ஸ்ரீலஸ்ரீ* சோம. கோபாலசாமி சுவாமிகள், திருமிகு. இராமசாமி செட்டியார் அவர்தம் குடும்பத்தார் ஆகியோர்களுக்கு எனது பணிவார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை மக்கள் அனைவரும் படித்துணர்ந்து ஆத்ம நேய இறையுணர்வை அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

J. K. K. முனிராஜா

உபதலைவர், ஆனந்தாஸ்ரமம்.

சிறப்புரை

நம்முடைய ஆனந்தாஸ்ரமம் ஸ்தாபகர் ஸ்ரீ ல ஸ்ரீ இராமசாமி சுவாமிகளின் அருள் மொழிகளில் 180-ஐ இப்பொழுது ஒரு சிறு பிரசுரமாக நமது ஆஸ்ரமத்தின் முதல் தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின் 8-வது குருபூஜை விழாவின்போது வெளியிடுவதில் ஆஸ்ரம கமிட்டியார் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர். மெய்மை உணர்ந்த நம் சுவாமிகளின் அருள் மொழிகள் சிறு வெளியீடுகளாக ஏற்கனவே நான்கு பாகங்களாக வெளி வந்ததை அடுத்து 10—6—88-ல் இந்தப் பிரசுரம் 5-வது வெளியீடாக இப்பொழுது தொடர்கிறது. எப்பொழுதும் போல் இப்பொழுதும் ஆன்மீக அன்பர்களுக்கு இச்சிறு நூல் அளவிடற்கரிய பெரும் பயனை நல்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும், நமது ஆனந்தாஸ்ரமம் ஸ்தாபகர் அவர்களால் ஆக்கப்பட்டும், திரட்டப்பட்டனவுமான "ஸ்ரீ பிரார்த்தனை மாலையும் பக்திப் பாடல்களும்" என்னும் நூல் ஆரம்பசாதகர்களுக்குப் பெரும் பயன் விளைவிப்பதாய் உள்ளதால் இதுவரை மூன்று பதிப்புகளை ஆஸ்ரமம் வெளியீடு செய்துள்ளது. மற்றும், ஸ்ரீ தத்துவராய சுவாமிகளால் மூலம் செய்யப்பட்டு, ஸ்ரீரங்கம் ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளால் உரை ஆக்கம் பெற்ற "அஞ்ஞவதைப் பரணி மூலமும் உரையும்" என்னும் அரிய அத்வைத நூல் ஆஸ்ரமத்தின் வெளியீடாக விரைவில் வெளியிட அச்சாகிக் கொண்டு இருக்கிறது.

நமது ஆஸ்ரமத்தில் ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின் அருள் வழிகாட்டுதலின் வழியாக அவர் பூத உடலுடன் இருந்தவரை சுமார் 198 அந்தர்யோகங்கள் (இலவச மதிய உணவுடன்) இடைவிடாமல் தொடர்ந்து நடத்தப்பட்டன. அவர்தம் மறைவிற்குப் பிறகும் அதனைத் தொடர்ந்து இந்நாள் வரை 295 மாதாந்திர அந்தர்யோகங்கள் தடைபடாமல் நடந்து முடிந்து இருக்கின்றன. தமிழ் நாட்டின்கண் செயல்படும் ஆன்மீக நிலையங்களிலேயே நமது ஆனந்தாஸ்ரமத்தின் இந்தச் சாதனை ஒப்பிடற்கரிய

தாக ஒளிவிட்டுச் சுடர்வது கண்கூடு. தவத்திரு நெரூர் ஸ்ரீ சதாசிவானந்தா சுவாமிகள் அவர்களாலும், அவரைத் தொடர்ந்து நெரூர் தவத்திரு. ஸ்ரீ தேஜோமயானந்தா சுவாமி அவர்களாலும் மேற்படி அந்தர் யோகங்கள் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.

வாரத்தில் மூன்று நாட்கள் (ஞாயிறு, புதன், சனி) மாலை 5-30 To 6-30 மணி வரை தொடர்ந்து தேவார வகுப்புகளும் நடைபெறுகின்றன. தினசரி காலை மாலை இரண்டு காலங்களிலும் கிரமமாக பட ரூபமாக உள்ள குரு மூர்த்தங்களுக்குப் பூஜை வழிப்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

கோவிலூர் மரபு தவத்திரு. சோம. கோபாலசாமி சுவாமிகள் அவர்கள் நமது ஆனந்தாஸ்ரமத்திற்கு வந்து தங்கி நமக்கெல்லாம் அருளுரைகளும், ஆன்மீகப் பயிற்சிகளும் அளிக்கத் துவங்கி இப்பொழுது சுமார் 3 ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. தேவரீர் சுவாமிகள் வந்த நாள் முதல் ஆனந்தாஸ்ரமத்தில் ஆன்மீகப் பணிகள் மென்மேலும் பெருகி அநேகருக்கு பக்தி ஞானம் ஆகிய ஆன்மீக உணர்வுகள் வளர்வதாக அமைந்து வருகின்றன. தினந்தோறும் காலையில் திருக்குறள் பாடமும் மாலையில் கோவிலூர் மரபு வேதாந்த பாடமும் சுவாமிகள் அவர்களால் கிரமப்படி நடத்தப்பட்டு வருகின்றன. மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக ஸ்ரீ சங்கர ஜெயந்தி விழாவும் சுவாமிகளின் அருளால் சிறப்புற கொண்டாடப்பட்டு அன்பர்கள் அநேகர் பயன் அடைந்துள்ளார்கள்.

ஷை சுவாமிகளின் மனமுவந்த ஒத்துழைப்பால் பள்ளி மாணாக்கருக்கான இந்துமத ஆன்மீகப் பயிற்சி முகாம் கடந்த இரண்டு வருடங்களில் மிகச் சிறப்பாக ஸ்ரீ சத்திய சாய் சேவா சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் நம்மால் நடத்தப் பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 80 மாணவர்கள் பயன் பெற்றனர். இந்த ஆண்டு குருபூஜையை அடுத்து மூன்று தினங்களில் பெரியநாயக்கன் பாளையம் ஸ்ரீ இராம கிருஷ்ணமிஷன் வித்யாலயத்தாரின் ஒத்துழைப்புடன் 100 மாணவர்களைப் பயன் பெறும்படி ஆன்மீகப் பயிற்சி முகாம்

மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. இவ்வாறாக தமிழ் நாட்டின் கண் உள்ள ஆன்மீக நிறுவனங்களில் நமது ஆனந்தாஸ்ரமத்தின் பணி தலைசிறந்த ஒன்றாக வளர்ச்சி அடைந்து வருவது நம் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியையும் பெரும் பயனையும் தரும் நிலைமையாகும். செய்தவம் செம்மை சேர்த்தே தீரும் என்பதை நமது ஆனந்தாஸ்ரமத்தில் ஆரம்ப காலத்தில் சான்றோர்கள் செய்த சீரிய தவத்தையும் இந் நாளில் விளையும் செம்மைசேர் தவ நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம்.

நமது ஆனந்தாஸ்ரம ஆன்மீகப் பணிகளுக்கு அவ்வப் போது நன்கொடை செய் அன்பர்களுக்கும், உடல் உழைப்பு நல்கும் தொண்டு உள்ளம் படைத்தோர்களுக்கும் ஆஸ்ரம நிர்வாகக் குழுவின் சார்பாக நன்றியும் வணக்கமும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


எல்லாம் வல்ல இறைவன் நமது ஆன்மீகப் பணிகளை மென்மேலும் வளரச் செய்து அருள்பாலிக்க வேண்டுமென இறைஞ்சி அமைகிறேன்.

இப்படிக்கு,

ஆர். எஸ். ராஜூ பி. ஈ.,

ஸ்ரீ ஆண்டாள் & கம்பெனி,

2—6—88 கொமாரபாளையம்.



ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள்

உ

சிவமயம்

ஓம் தத் சத்

ஸ்ரீ பரப் பிரம்மனே நம:

அருள் மொழிகள் 180.

இயாவும் சிவம் செயல்.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

1. அனைவருள்ளும் அந்தரியாமி யாயிருந்து அனைத்தும் நீயே செய்வதானால், யாரை நேசிப்பது யாரை துவேஷிப்பது யாண்டும் நீயேயெனக் கண்டு களிப்பதே, என் உள்ளக் கிடக்கை. தேக முதல் சகலமும் மாயிகமென நிதர்சனமாக வறிகின்றேன். அதனால், பயனற்ற உலக காரியங்களில் விருப் பம் இல்லை. சரீரம் புழுவடிவ மாதலால், அறிவுடையார் மற்றொரு சரீரத்தைத் தேட இச்சியார்.

2. ஒருவனுக்குச் சுகம் வரும்போது அதில் அனேகர் பங்கெடு த்துக் கொள்ளுவர். துக்கம் வந்தால் அதில் ஒருவரும் கிஞ்சித்தும் எடுத்துக் கொள்ளார். தனது அகங்காரத்தை வென்றவனே சுத்த வீரன். அவனே ஆனந்த வடிவ ஆன்மா வைப் பெற்றவ னாவான்.

3. ஓர் அன்னை இரு குழந்தைகளுக்கு முன் வாழைப் பழத்தின் சுளையை எடுத்து மறைத்துக் கொண்டு தோலை எரிந்தாள். விவேகமுள்ளவன் இரசமற்ற தோலை எடுத்து வீசி எறிந்து விட்டுத், தாயை அணுகி பழச்சுளையைத் தரும்படி மன்றாடி வாங்கி உண்கிறான். மற்றவன், அவிவேக த்தால் தோலையே எடுத்து மெல்லுகிறான். ஆனால், அதை அன்னை சகியாது வேண்டா மென்று தட்டுகிறாள். அதை அவன் விடுகிறானில்லை, பின்னர், தாய் தன் கருணையால் பிடுங்கி எறிந்து விடுகிறாள். அதற்கவன் அழுகிறான். இது போன்று, பரமேஸ்வரன் ஆனந்தரச வடிவ ஆன்மாவை மறைத்துக், கருமானுசாரம் அநித்திய இரசமற்ற உலக விஷயங்களைச் சீவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றார். விவேகியர், அதை விட்டெறிந்து பரமேஸ்வர கிருபையைப் பிரத்தியக்ஷ மாகக் கண்டு, அவரருளால் அகண்டைகரச ஆன்மானுபவம்

பெறுகின்றனர் .அவிவேகியர் ஈஸ்வர ஆக்ஞை வடிவ வேதத்தால் நன்றாக போதிக்கப்பட்டும், இரசமற்ற விஷய போகங்களையே இச்சிக்கின்றனர்.

4. தியானிகளுக்கு அவசியம் ஈஸ்வரக் கிருபையால் சகல வாசனையின்றிய ஆனந்தான் மானுபவம் வெளிப்படுகிறது. சிட்டுக்குருவி தன் முட்டைகளை சமுத்திர அலையால் ஜலத்தில் மூழ்கியபோது, தனது மூக்கினால் சமுத்திர ஜலத்தை இறைக்க ஆரம்பித்தது. அது, தன் இனபக்ஷியால் விலக்கப்பட்டும், தன் பிரயத்தனத்தை விடாது, மாறாகத் தன் இனத்தையும் சேர்த்துக் கொண்டது. அவ் விந்தையைக் கண்ட நாரத பகவான், பக்ஷிராஜனான கருடனுக்கறிவிக்க அவர் வருகையைக் கண்ட சமுத்திரம், அலைகளால், முட்டையை வெளியில் கொண்டு வந்து தள்ளியது. குருவிகளும் சாந்தியடைந்தன. தியானி புருஷன் கடவுட் கிருபையை நாடி ஞானமடையப் பிரயத்தனத்தை விடாது செய்து வரின் எவ்வாறாவது அவசியம் கடவுள் கிருபையால் மனம் அடக்கப் பெற்று பரமானந்த வடிவ மோக்ஷம் அடையப் பெறுகிறான்.

5. சிறு பெண்கள் விளையாடும் போது ஒருவருக் கொருவர் அழுகிற விளையாட்டும் வந்து விடும். அப்போது, இரண்டொரு சிறுவர் நன்றாக அழுவது போல நடிப்பர் ஆனால், அவர்களின் தாய் வரக்கண்டவுடன், மிகக் களிப்போடு பொய்யழுகையை விட்டு பெரிய சிரிப்போடு களிப்பர். ஞானிகள் உலக வியவகாரங்களில் மற்றயரைப் போல இராகத் துவேஷங்களுடையவர் போல் நடிப்பர். ஆனால், ஆனந்தான்மானுபவ மிகுதியில் இடையிடையே வெளியிலும் சந்தோஷக் குறி காணப்படும். உள்ளில் கொஞ்சமும் திடமான துக்கம் உண்டாகாது.

6. பச்சை மரத்தில் தீ தானாகப் பிடிக்காது. பக்கமிருந்து வரும் சுவாலையால் சிறிது கருகும். அதனால் அம்மரத்தின் குளிர்ச்சி கெட்டு விடாது. காய்ந்த மரத்தில் தீப்பிடித்தால் அம்மரம் முழுமையும் தீயின் சுவாலை, பற்றி எரித்து விடும், ஞானியின்கண், இராகத் துவேஷமிராது. பிறரால் ஏற்படினும் அதனால் அவன் அசைக்கப் படான். அவனது சுபாவமான குளிர்ந்த ஞானானுபவத்தால், அந்த இராகத் துவேஷம் விருத்தியாக இடமில்லை. அஞ்ஞானியின்கண், இராகத் துவேஷம் தோன்றின போது அவனது முச்சரீரங்

களும் தபிப்பிக்கப்பட்டு, அத் தீய குணங்களால் வியாபித்தவனாய் நாசத்தை அடைவான்.

7. பசுவின் அங்கங்களில் பாலில் நிறைந்துள்ள சூக்ஷமமான நெய் அதன் வியாதிக்கு மருந்தாக உபயோகப்படுகிறது. கறந்து, காய்ச்சி, கடைந்து எடுத்தால் உபயோகம் ஆகும். ஆனந்த வடிவ ஆன்மா, தன் சரீரத்துள்ளே இருப்பதானாலும், தனக்கு அநுமவமாகாது. விவேக தியானாதிகளால் கடைந்த அதனால் அபரோக்ஷமான பின் ஆனந்தானுபவம் உண்டாகி, சமுசார துக்க வடிவ வியாதி போம்.

8. விக்கிரகங்களில் மாத்திரம் கடவுளைக் காணுபவர் மந்த மதியினர். கடவுள் எங்கும் நிறைந்தவரெனக் காண்பவர் மத்திம புத்தியினர். கடவுள் சச்சிதானந்த இலக்கணமுடைய அகண்டவஸ்து எனக் காண்பவர் உத்தம புத்தியினர். பஞ்ச கோச சாக்ஷி வடிவினனும், பிரபஞ்ச சாக்ஷி சொரூபமும் சச்சிதானந்த வடிவமுமாதலின் என்றும் ஏகம் எனக் காண்பவர் உத்தமோத்தம மதியினராவர். விஷத்தைப் பார்க்கிலும் அசுத்த வாசனை மிகக் கொடியது. விஷம் ஒரு சரீரத்தை மாத்திரம் கொல்லும். அசுத்த வாசனை அனேக ஜன்மங்களில் உடனிருந்து துன்புறுத்தும்.

9. பாலை, பாம்புக்கு ஊட்டினால் அது விஷமாக மாறுகிறது. பாலை, விவேகமுள்ள சிறுவர்க்குக் கொடுத்தால், புத்தி தெளிவும் நல்ல வலிவும் உண்டாகி நன்மைளைச் செய்கிறது. அகங்காரம், தேகாதி உலகப் பொருளோடு சேர்ந்த வழி துன்ப வடிவ ஜனன மரண சமுசாரத்துக்கு ஏதுவாகிறது. அகங்காரம், அனான்ம அபிமானங்களை விட்டு ஆன்மாவோடு சேர்ந்தழிந்தால் சர்வானந்த வடிவமாக பிறப்பற்ற முக்தி பதம் எய்துகிறது.

10. பூமியில் குழி செய்ய இடிக்கப்பட்ட கட்டப்பாறையைச் சிறிது ஆழம் சென்ற பிறகுதான் நன்றக அசைத்துக் குழியை அகலம் செய்ய வேண்டும். மேலோடே அசைத்தால் கழி மண்களால் அடைபட்டு விடும் பின்னர், குழி செய்ய முடியாது. பெரியோர்களிடம் சாஸ்திர சிரவணம் செய்யும் போது மனமாகிய குழியில் விவேகமாகிய கட்டப்பாறையால் புத்தி நிரோதமாகிய குழியை ஆழமாக்க வேண்டும். அங்ஙனமின்றி ஆரம்பத்திலேயே வீண் சங்கையாகிய சலனத்தால்

விவேகத்தைச் சலிப்பித்தால் புத்தி நுண்மை இன்றி தடிப்பு உண்டாகும். பின்னர் குதர்க்கமே உண்டாகும். சிறிது சிறிதாக அனுபவம் வரும், சிரவணார்த்தத்தைச் சிந்தித்து வெகு நுண்மையான அநுபவத்தில் சங்கையுண்டானால் அச்சங்கையை அநுபவாநுசாரமாகச் செய்ய வேண்டும்.

11. உலகம் அனர்த்த மாதலால் அதன்விவகாரம் அனைத்தும் அனர்த்தமே. மாசற்ற உள்ளத்தில் ஆன்மானந்தம் ஒன்றே விரும்பப் படும்.

12. சிறுவர்கள் ஜன்னல் வழியாக வரும் சூரிய வெளிச்சத்தை தின்னும் ஓர் பொருளென எண்ணி, கையால் பல வகையாகப் பற்றிப் பார்ப்பர். அது சிறிதும் பயனற்றதாகவே முடியும். லௌகீக விஷய போகிகள் அநந்த சஞ்சலத்தோடு விஷயங்களைச் சுகமென்று கருதி எண்ணி, எண்ணி இருமாந்திருப்பர். அவர்கள் சிரமப்பட்டது எல்லாம் வீண் என்று அந்தத்தில் காட்டி விடும்.

13. கல்லை எவ்வளவு நாள் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தாலும் ரசம் தராது ஆசையை சுகத்தின் பொருட்டு எவ்வளவு நாள் அதனோடு சேவை செய்து வந்தாலும் ஆனந்தம் உண்டாகாது.

14. அஞ்ஞானியின் ஆசை. நெல்லின் உமியைப் போன்றது ஞானியின் ஆசை, நெற்பொரியின் உமி போன்றது.

15. கண்ணினுள் சிறு துரும்பு விழுந்து விட்டால் அதை எடுக்க முயன்று திறந்தால் இவனிஷ்டப்படி நிற்பதில்லை. அதனிஷ்டப்படிதான் மூடிக் கொள்ளும் பிரயத்தனத்தால் விரல் முதலிய கொண்டு பிடித்துக் கொண்டுதான் ஆராய வேண்டும். ஒரு கண்ணென்ற இந்திரியமே இவன் சொன்ன படி செய்வதில்லை; அங்ஙன மிருக்க நான் செய்தேன் என இவன் அகங்கரிப்பது எங்ஙனம் உண்மை யாகும்.

16. மோக்ஷம் மோக்ஷம் என்று சொல்லிக்கொள்ளும் ஜீவன்கள் அனேகரில், மோக்ஷத்தின் உண்மை வடிவம் இன்னதென்று பரோக்ஷமாகவாவது சமுசய மின்றி தெரியாது அது விஷயமாகப் பெரியாரை யடுத்து பழகி வந்து சிரத்தையோடு அவர்கள் உபதேசத்தை கிரஹித்தவருக்கே தெரியும்.

17. இராமனது ஒழுக்கமும், இலக்ஷ்மணனது சேவையும், சீதையின் பக்தியும், அநுமானது பிரமசரியமும், பரதனது

பிடிவாதமும், விபீஷணனது சரணாகதியும், மிகச் சிறந்தவைகள். ஆனால், இவையாவும் இராமனது ஒழுக்கமாகிய தீபத்தின் முன்னேதான் விளங்கின. அத்தீபம் இல்லையானால் இவைகள் விளங்கா. இதுபோல அதிஷ்டான ஆன்மாவின் முன்னிலையில் கூடும்.

18. மனோநாசம்:- அரக்கர்கள் ஒழிந்தார்கள் என்றால் இராவணன் போன்ற துஷ்டர்கள் ஒழிந்தார்கள், விபீஷணன் போன்ற சிஷ்டருண்டு, எனக்கொள்ளுதல் போல, குரு ஈஸ்வரப் பிரசாதத்தால் ரஜோ தமோ குணங்களின் பரிணாமங்களான இராக மோகாதிகளை அப்பியாசத்தால் நாசஞ் செய்து சத்துவ மனம் உண்டென்று கொள்ளல் வேண்டும்.

19. வாசனாசயம்:- ஆகாயத்தில் கண்ணுக்குத் தெரியாத மலின அணுக்கள் பறக்கின்றன. அவை, நிறைய மழை பெய்யும் போது நாசமாகும் ஆகாயம் நின்மலமாம். ஆன்மாவின் கண் அனான்ம வாசனை அனுக்கள் தங்கியிருக்கும். அவை யாவருடைய பிரயத்தனத்தால் ஆன்ம வாசனை நிறைந்து, சுத்த சத்துவத்தின் நிரோத வடிவ மேகம் திரண்டு, ஆனந்த வடிவ மழை நிறையப் பெய்யும் போது அவ் வாசனை ஒழிந்துபோம்.

20. குரங்கு, மனிதன், இருவருக்கும் இரண்டு தேங்காய்கள் கிடைத்தன. குரங்கு, தேங்காயை பல வகைகளிலும் முயன்று மட்டையையே சுரண்டி துன்பமடைந்து, சுகம் கிடைத்தது போலப் பாவித்து, கடைசியாகத் தேங்காயை விட்டுச் சென்றது மனிதன் சுலபமாக அதை உடைத்துப் பருப்பைச் சுகமாகத் தின்று பசி தீர்த்தக் கொண்டான். அதன் அவாந்திரப் பயனான ஜலமும் குடித்தான். அஞ்ஞானி, ஞானி, இருவரும் ஒரே உலகில் இருக்கின்றனர். ஆனால், அஞ்ஞானி புரம்பில் அபிமானமுடையவனாய், இரசமற்ற விஷயத்தையே புசித்து மாண்டு போகின்றான். ஞானி, விஷயத்தின் இரச அதிஷ்டான வடிவ ஆனந்த ஆன்மாவை அனுபவித்து அவாந்திரப் பலனான சத்துவ குண சம்பத்தையும் அனுபவித்து வாழ்கிறான்

21. மனோ நிரோதத்தால் உளதாகும் பேரின்பச் சுகமொழிய வேறொரு சுகமும் இடைவிடா தனுபவிக்க முடியாது. அப்படி அவைகள் ஓர்போது சுகம் போலக் காணப் பட்டாலும், அனேக தடைகளால் பிணிக்கப் பட்டுள்ளன.

ஆதலால் அவைகள் துக்கமே என்று விவேகி அறிவான்.

22. காசி க்ஷேத்திரத்தை இருவர் கண்டனுபவித்து வந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவனுக்கு அடுத்த மணியில் தம் ஊருக்குப் போய்ச் சேரத்தக்க ஆகாய விமானம் கையிலிருக்கிறது. மற்றையனுக்கு யாதொரு வசதியு மின்றி நடந்தால் தான் போகலாம். இவ் விருவருக்கும் காசியின் அனுபவ ஸ்மிருதிகள் எப்படியோ; அப்படியே இருவருக்கும் அகண்டாநுபூதி உண்டாகிறது. ஒருவனுக்குச் சம தமாதி வைராக்யாதி குணங்கள் நிறைந்திருக்கிறது. இவனனுபவம் ஸ்மிருதியும் சகஜமாகும். மற்றையனுக்கு சமதமாதி விசேஷமாக இல்லாமல் அபரோக்ஷத்துக்குரியது மாத்திரம் இருந்தது. அவன் வருந்தி அப்பியாசித்துத்தான் பரமானந்த இன்பம், விதேக முத்திக்கு இடையே பெற முடியும்.

23. சுபாவ மாகவே, ஆற்றில் போகும் தண்ணீர், ஒரு காசும் சிலவில்லாமல் அனேகருக்கு உபகாரம் செய்து கொண்டு செல்லுகின்றது. அதை வேறு வழியாகச் செலுத்தி உபயோகிக்க வேண்டின், அனேக லக்ஷம் ரூபாய் செலவும் உபத்திரவமும் உண்டாகின்றன. மனிதன் இயற்கையாகவே தன் சொரூபநிலை விளங்க வேண்டிய அளவு சுத்த ஆசாரபரனாக வாழ்ந்து வந்தால், அவனுக்கு மனோநாவாசனாக்ஷயப் பொருட்டு அதிக சிரமம் தேவையில்லை. மாறுபட்ட துராசாரமாக ஒழுகி வந்தால் அவனுக்கு ஞான வழியில் செல்லும் போது அனேக தடைகளும் சிரமங்களும் உண்டாகின்றன. ஆனால், முயன்றால், இவ் வாச ஈனனும் அவசியம் மோக்ஷம் அடைய முடியும்.

24. சுக்கிரீவன் அநுமான் போன்ற நண்பரைக் காணும் போது, அவர்களால் கொடுக்கப்பட்ட நகையைக் கண்ட இராமன், சீதையினது என்றெண்ணி அவைகளை இலக்ஷ்மணனுக்குக் காட்டினார். அப்போது இலக்ஷ்மணன் சில கழுத்தில் அணிந்த ஆபரணங்களைக் கண்டு, இவை யாருடைய தென்பது நிச்சயமாக என்னால் கூற முடியாது என்றான். காரணம் என்ன? இலக்ஷ்மணன் ஒரு நாளும் சீதையின் முகத்தைப் பார்த்த தில்லையாம். இலக்ஷ்மணனது அகத் துறவு எவ்வளவு உயர்ந்தது! அஃதல்லவா ஒழுக்கமும் துறவுமாகும்.

25. பெண்களை அனர்த்த ஏதுவென, அவர்களின் ஆசையோடு கூட்டுறவையும் விடுவது மிக்க சிரேஷ்டமாகும். பாதித்து அதாவது பொன், மண், பெண் இவர்களின் சொரூபங்களை பஞ்ச பூத மயமென்றும் அவைகளை மாயா வடிவமென்றும் அம் மாயையும் இரச்சுவில் சர்ப்பம் போல என்னிடம் கற்பிதம் ஆனதால் அதிஷ்டான சத்திய ஞான ஆனந்தனான என்னைத் தவிர வேறொன்றும் இல்லை எனக் காண்டல், கிரமமான விசார திருஷ்டியாகும். இதுவே பந்த நிவிருத்தி வடிவமுமாம்.

26. ஒருவன் தான் குறிப்பிட்ட இடத்திற்குப் போகும் போது இடையே இரவில் தங்கித் தங்கிச் செல்கின்றான். இரவு வரும் போது வழிநடைக்குத் தடையாயிற்றே என்று அவன் பயந்து அதோடு நின்று விடுவதில்லை. சாதகன் அகண்டானந்த மோக்ஷ வீட்டை நாடி அப்பியாசம் செய்யும் போது அனேக இடையூறுகள் நேரிட்ட காலத்தும் இவன் அவைகளை பொருள் படுத்தாமலும், நின்று விடாமலும், தனது நன்மார்க்க சாதனத்தில் முன்னேறிக் கொண்டே போக வேண்டும். அவசியம் தனது இலக்ஷ்ய வடிவ பரமானந்த சொரூப மோக்ஷத்தை அடைவான்.

27. கருத்தூன்றி விவேகிப்பவர்கள் இவ் வுடலோடு இவ்வுலகில் வாழ இச்சியார்கள். நித்திய சாம்ராஜ்யமான பரம சுகத்தையே நாடுவார்கள்.

28. மனமே! எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டுமானால், அசஞ்சல அதி சூக்குமமான என்னையே பற்றி நில்.

29. மாயையின் பரிச்சின்ன சக்தியே மனம். வீரர்களின் அதிக நன்முயற்சியே ஈஸ்வரக் கிருபை வடிவம் அனுமானுக்குத் தெய்வக் கிருபையாகிய முயற்சி உண்மையால், கடல் கடக்க முடிந்தது.

30. முன்னொருகால் இந்தியாவின் தென்கிழக்குக் கோடியில் ஒரு இராவணன் இருந்தான், அவனது தொந்தரவை சகிக்க முடியாது, சாதுக்கல் பரமனை வணங்கி, இராமாவதாரத்தால் அவ்வின்னல் நீங்கி, சுகமடைந்தனர். இப்போது நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு இராவணன் வாழ்வதாலும், அவனது சைன்யங்கள்

படக்காக்ஷி வடிவமாக வந்திருப்பதாலும், இக்காலத்திய ஜிஞ்ஞரீசுக்கள் என்ன செய்வார்கள்! பாபம்! திரும்பின பக்கமெல்லாம் காக்ஷியாலும், ஓசையாலும் இவ் விராவண சைன்யங்கள், உடலை விட்டு உயிரையும், மனத்தையும், சதா துன்புறுத்துகின்றன. இவ்வரக்கர் நாசம் இனி எந்த இராம கிருஷ்ணர்களால் மடியுமோ தெரியாது! இவை மடிந்தால், ஏதோ ஒருவாறு பிரமசரிய முதலிய தருமமும், நல்லொழுக்கமும் தலையெடுக்கும்.

31. சுத்தமான இடம் சுத்தமான காற்றுள்ள இடத்தில் வாசஞ் செய்தலாலும், சுத்த ஆகாரம் உட்கொள்வதாலும் தூல சரீர சுத்தி யுண்டாகிறது. சப்தாதி விஷயங்களை மித்தை யென்றாவது, இறைவன் வடிவமென்றாவது நிச்சயத்தோடு நின்றால், இந்திரிய சுத்தி உண்டாகின்றது. என்னேரமும் ஆன்மாவான தன்னையே நாடச் செய்வதால் மனம் சுத்த மாகின்றது.

32. மனமே! நீ என்ன நினைக்கின்றாய்; நீ நினைப்பதெல்லாம் பஞ்சபூதந்தான்; அநித்தியந்தான்; அவைகளால் நீ ஒருபோதும் சுகமடையாய், நில், என்னை உள்ளபடி தியா-னஞ்செய். என்னிடத்தில் அபேத ஆனந்தம் பெறுவாய்.

33. தியானத்தில் மனம் ஓடும்போது அதன் வழி போகாமல் மனத்தை என்ன பொருளென்று ஊன்றி விசாரித்தால், அடியோடு நாசமாகி விடும். இது சுலபமான வழி.

34. மோக்ஷமென்பது புதிதாக அடைப்படுவ தொன்றல்ல. அளர்த்தங்களை விலக்கினால் தானாக மிஞ்சுவதுதான் மோக்ஷம். அதுவே ஞானவாழ்க்கை, இதுவே தூய மார்க்கம்.

35. தியானத்தையும் விசாரத்தையும் விடாது செய்து வருபவர் தான் பலனடைய முடியும். ஒரு கடனாக சிறிது சிறிது செய்து வருபவர் எவ்வளவு காலமானாலும் ஒரு பலனையுங் காண முடியாது.

36. இறந்தும் இறவாதவன் ஞானி. இருந்தும் இறந்தவன் அஞ்ஞானி. இவன் விரும்புவது நீர்மேலெழுத்துப்போன்ற. உலக வியவகாரமும் உலக சுகமும் தான்.

37. கிளாசின் (கண்ணாடியின்) சுத்தத்திற் கேற்றபடியே பிரகாசம் மிகுந்திருக்கும்! மனத்தின் சுத்தம் எவ்வளவு அதிகமுண்டோ, அவ்வளவு பேரின்பம் வெளிப்படும். தான் ஆனந்தன் என்பது மனம் அடங்கின அளவில் விளங்குகின்றது.

38. ஒருவன் சமையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வீட்டில் சேர்க்கிறான். சிறுவர்கள், பின்னால் பக்குவ்மான பிறகு தங்களுக்கு உணவாகுமென்று விளங்காமலும், பொறுத்திராமலும், அப்போதே தின்ன வேண்டுமென்று பரபரப்படைகின்றனர். ஆனால், வயது வந்தவர்கள் பக்குவமான பின்தான் உண்கின்றனர். அஞ்ஞானிகள் அல்ப அறிவால் கண்டதைக் கேட்டதை அப்போதே விவேகமின்றி, மோகத்தால் அனுபவிக்க இச்சிக்கின்றனர். ஞானியாகிய விவேகி, யாவற்றுள்ளும் நிறைந்துள்ள தன்வடிவ ஆனந்த ஆன்மாவில் திளைத்து, சாவதானனாய் விஷயத்தில் சுழுத்தனாகிறான். (ஆழ்ந்த நித்திரை செய்கிறான்.)

39. கற்பனைக்கு மூலம் மனம். ஆனதால் மனத்தைத் தன்னில் நிறுத்தி, புறத்தில் செய்வதைத் தடுத்தால் கற்பனை உண்டாகாது. அதனால் துக்கமும் உண்டாகாது.

40. அதிகப் பசியுடையவனுக்கு இரசவர்க்கங்களோடு கூடிய அன்வங் கிடைத்தால் சந்தோஷமுண்டாவது போல, மோக்ஷதாகமுடையவனுக்கு சத்துக்களைக் கண்டால் சந்தோஷமுண்டாம். இவைகளுக்கு இறை பக்தி பிரதானம்.

41. ஒருகுடியானவன் பழவர்க்கக்கொடிகைள அல்லது செடிகளை நல்ல பலனை உத்தேசித்துப் பயிர் செய்து வருகின்றான் அதில் சிறுவர்கள் சிறு பிஞ்சுகளை அறுத்துத் தின்னுகின்றனர் மத்தியதரப் பையன்கள் சில காய்களை அறுத்துத் தின்றும். குறைந்த விலைக்கு விற்றும் வருகின்றனர். இவ்விருவருக்கும் முக்கியப் பயனாகிய பழவர்க்கங்களின் கௌரவமும், அதன் ஊதியமும் இன்னதென்பதை நன்கறியார்கள் அவைகளை அனுபவிக்கவும் முடியாது. ஆனால், குடியானவன் முன்னுள்ள பிஞ்சு, காய்களை அறுத்துச் செடியைக் கெடுக்காமல், பழமொன்றனையே நாடி அதன் பலனையும் அடைகின்றான். ஈஸ்வர சிருஷ்டியில் உள்ள பிரபஞ்சத் தோற்றங்களில், சில பாமரமக்கள் கண்டதே காக்ஷி கொண்டதே கோலமாக விஷய

சக்தராய் அதனையே யனுபவித்தும், புழு மலக்கிருமிகளைப் போல மடிகின்றனர். இன்னும் சில அல்ப விவேகமுடைய புருஷர், இவ் வுலகினும் அதிக போகமுடைய சுவர்க்காதி அனித்ய போகங்கள் அடைய இச்சித்து, அதன் வழியே அளித்த பலனை அடைந்து மீண்டும் துன்பமடைகின்றனர். அவ் விருவரும் இறைவனின் முத்தொழில் பிரபஞ்சங்களை நன்கு உணராதவர்; பூரண விவேகமற்றவர். அதனால் இவ்வுலகில் எது பயனென அறியாது மோக்ஷத்தை யடையாது, இழி நிலையை அடைகின்றனர். ஆனால், உத்தம விவேகி முற்கூறிய பலனை கிஞ்சித்தும் அடைய இச்சியா தொழித்து, பரம மேலான ஞானமொன்றாலேயே மோக்ஷமடைந்து ஆனந்தராக வாழ்கின்றனர்.

42. கரணங்கள் தடிப்புறும் போது ஆகாரத்தைக் குறைக்க வேண்டும். ஆகாரமும் மிக்க புளிப்பு, உறைப்புள்ளதாக இருக்கலாகாது.

43. பருவத்திலிடப் பட்ட வித்துக்கள் நல்ல பயனைத் தரும். நல்ல பருவ வயதில் அப்பியசிக்கப் பட்ட ஞான சாதனம் அவசியம் மோக்ஷத்தைத் தரும்.

44. பகவானும் ஆனந்தம்; அவரது சிருஷ்டிப் பொருளும் ஆனந்த வடிவமேயாம், ஆனால், சீவர்கள் அச் சிருஷ்டியில் நானா புத்தியைக் கற்பித்துத் துக்கின்றனர்.

45. நன்றாகக் கற்று, உலக நடையில் உபேக்ஷை பிறந்து, ஞான வாழ்க்கையில் முன்னேற்ற மடைந்து, மனம் அடங்கப் பெறின், இதுவே சிறந்த செல்வம். இதனினும் சுகந் தரும் செல்வம் எவ்வுலகிலு மில்லை.

46. ஒருவன் உறுதியாகப் படிக்காமல், அனேக சாதனங்களை அப்பியாசிப்பானாயின், அவ் வப்பியாசம் பிறரிடத்தில் பேசிக் கொண்டிருக்கத்தான் உதவும். தனக்கு ஒரு பயனும் தராது ஒன்றையே நன்றாகப் பழகி, அதில் கொஞ்சமேனும் நன்மை யடைந்து மற்றைய நன்மையையும் நாடி நின்று முயற்சிப்பவன் சீக்கிரம் பலன் அடைவன். அவன் பிறரிடம் அதிக கௌரவம் பாராட்ட மாட்டான்.

47. சாதகன் அடங்கி யிருப்பது சாதனைக்கு அதிக பயன் தரும்.

48. எப்படி ஜலத்தின் சூடு வெளிப் பாத்திரத்தின் பரிசத்தாலும் அறியலாமோ! அதுபோல, ஒருவன் மனப் போக்கை அவனது முகத்திலும் செய்கையிலும் கண்டு கொள்ளலாம்.

49. பழமுள்ள விருக்ஷத்தின் மேலுள்ள முட்செடிகளை, அப்போதைக் கப்போது மேல் ஏறுவதை வெட்டி வந்தால், ஓயாது முளைத்து அம் மரத்தை மூடிக்கொண்டே யிருக்கும். வேரோடு எடுத்து விட்டால் மீண்டும் உண்டாகாது. ஆன்ம ஞானத்தை குரோத லோபங்களாகிய முட்செடிகள், ஒன்றன் பின் ஒன்றாக வந்து மூடிக்கொண்டு வருகின்றன. நாம் வகையறியாது ஏதோ ஒருவகையாக பிரதிகூல வாசனையால் தள்ளுகின்றோம். ஆனால், அவைகள் அப்பிரதிகூல வாசனையால் மாத்திரம் போகாது. அவைகளின் மூலம் கெட வேண்டும். அம்மூலம் ஆசையே யாகும். ஆதலால். ஆசையை அடியோடு நீக்கினால், பிரதிபந்தங்களான குரோதாதிகள் சுத்த வாசனையாகிய வெய்யிலால் தீய்ந்து காய்ந்து விடும்.

50. நன்றாகப் பார்க்குமிடத்து சிதாபாசனுக்கே சரீரங்களைப் பற்றிய ஜுரம் இல்லையாயின், அவன் அதிஷ்டமான ஆன்மாவுக்கு எவ்விதத்தாலும் யாது துன்பமு மில்லை. ஆதலால், ஞானி துக்கமற்றவன்.

51. தியானம் செய்கிறவர்கள்: அதிகப் பேச்சுள்ளவர்கள் எவ்வளவு நல்லவர்களானாலும், அவர்கள் சகவாசத்தைக் குறைத்தல் வேண்டும்.

52. மாம்ச மய சரீரம் நலமல்ல வென்பதை அடிக்கடி விசாரித்துத் தெளிதல் வேண்டும். அதனால், அனேக துக்கங்கள் போகும்.

53. தியானமென்பதும்; விசாரமென்பதும், பெண்ணாசை பொருளாசையற்ற மனத்திற்குத்தான் பிரியமிருக்கும். ஆதலால், நாம் முதலில் ஆசையற்றவனாதல் வேண்டும்.

54. ஜலத்தில் ஜடப் பொருள்களான திரண முதலியவை ஜலம் போன போக்கில் செல்லுகின்றன, மீன் போன்ற சேதன ஜந்துக்கள் எதிர்த்துச் செல்லுகின்றன. உலகில் விவேக மற்றவர்கள், உலகம்போன போக்கில் தூர்த்தராகித் துன்புறுகின்றனர். சில உத்தமர் எதிர்த்துப் பர நிலையை அடைகின்றனர்.

55 ஆயுள் நீர்க்குமிழி போன்றது. சரீரம் நானென்பது, பாம்பின் விஷயத்தினும் கொடிது. பெண் போகத்தில் இச்சை வைப்பது நெருப்பில் விழுவது போன்றது. தனத்தில் ஆசை வைப்பது விஷ ஐந்துக்களின் சேர்க்கை போன்றனது. இவை யாவையினும் நிராசையை சம்பாதிப்பதினும் மேலான சுகம் வேறொன்றும் இன்று.

56 கருவி கரணங்களுக்கு உறுதியுள்ள போதுதான், மனத்தை அடக்க முடியும். பேரின்பம் சுலபமாக அடையவும் முடியும்.

57 சர்வ ஜனங்களுக்கும் ஒரு உண்மையைக் கூறுகின்றேன். சர்வ சுகத்தினும் ஆன்ம சுகமே சிறந்தது. இது நீங்கள் அடைந்த போது நன்றாகத் தெரியும்.

58 விவேக முதிர்ச்சியாலும் சாந்தி கிடைக்கின்றது. ஆனால் அது நிலைபெறுவ தில்லை.

59 "நிராசை பூரணமாகும் போது தான் மற்றெல்லா சாதனமும் பூர்த்தியாகின்றன.

60 மனக் குழப்பமின்றிய தியானம் கொஞ்சமானாலும் நல்ல பலன் தரும்.

61 மனம் தியானம் செய்யும் போது சாந்தி யடைய வேண்டின், கூடுமான வரையில் அனாவசியமான விவகாரங்களை ஒதுக்கி வைத்தவனாக வேண்டும்.

62 பொன்னால் செய்த சிம்ஹத்தை, சிறியவனும் வயது வந்தவனும் வேடிக்கையாகக் கண்டனர். அதில் சிறியவனுக்கு சத்தியமாகவும், பெரியவனுக்குப் பொய்யாகவும் அனுபவிக்கப்படுகின்றது. உலகம், ஞானி, அஞ்ஞானி இருவருக்கும் போக்கியமானாலும், அஞ்ஞானிக்குச் சத்தியமாகவும் ஞானிக்குப் பொய்யாகவும் அனுபவிக்கப் படுகின்றது.

63 மித்தையா திருஷ்டி, தன்மய திருஷ்டி ஆகியவைகள் ஆரம்பத்தில் அவசியம். பின்னர், எப்போதும் சங்கல்பமன்று. ஒரு திருஷ்டியும் இல்லாது இருத்தலே பரம சுகம்.

64 வள்ளுவரை அனேகர் நல்ல வாழ்க்கை யுடையர் என்று ஒப்புகின்றவர். காரணம் என்ன? புறத்தில் ஏழ்மையும் அகத்தில் சுத்தமும் நிரம்பிய ஞானச் செல்வமுடையவராக இருந்தமையால்தான்.

65 ஒருவன் தன் மனக் கோணலை அறிவதற்கு அனேக ஜன்மங்கள் செல்லுகின்றன. ஆனால், நல்லா சாரியனை அடைந்தால் சீக்கிரம் தெரியலாம்.

66 பூரண மனவலியும், நிஷ்காம புண்ணியமும், ஈஸ்வரக் கிருபையுமுள்ளவன், தன்னையே தியானித்துத் தன்னிலே சாந்தியடைந்து தானாக சுகித்திருப்பன். இவனுக்கு மற்ற வியவகாரமனைத்தும் பாரமாகும்.

67 மனத்தூய்மை யுள்ளவர்கள் எவ்வளவு தீமையாதிகள் உண்டான போதும் கலங்கார்கள்.

68 சங்கல்பமொழிந்தால், மித்தையாத்மா புத்தி கெடும். புத்தி கெட்டால், சித்தம் கெடும். சித்தம் கெட்டால், அக ந்தை கெடும். அகந்தை கெட்டால் ஆனந்தமாம்.

69 ஓர் விவசாயம் செய்பவன் பிராப்த மென்று தகுந்த முயற்சி செய்யாமல், தீ முயற்சி செய்து நிலங்களுக்கு விபரீத மான காலங்களில் ஜலம் முதலியவைகளை விடுவானாயின், தானியத்தைக் காலத்தில் பார்க்க முடியாது. மாறாகத் துக்கமே உண்டாகும்; முயற்சியும் வீணாகும். அதிகாரியும், நன்முயற்சியால் நல்ல சாதனங்களைத் தேடியடை-ந்து, சுகம் பெறாமல் தீமுயற்சியைப் பிராப்த மென்று சொல்லிக் கொண்டு செய்வானாயின், கடைசியாகத் துன்பமும், மறு பிறவியில் நரகமும் பிராப்தமாகும்.

70 உத்தம சாதுக்களுக்குப் பெண்ணாசையும், பொருளா சையும் கனத்த பகை. இவைகளை வென்றவன் பரமா னந்தன் ஆகின்றான்.

71 சில வேதாந்திகள் ஜனகரைத் தங்களுக்கு உவமான மாகக் கூறிக் கொள்ளுகின்றனர். அது நன்று தான் ஆனால், அவருடைய மோக்ஷ தாகமும் ஞானானுபூதியும் தங்களுக்கு உண்டா? என்பதை ஆராய்ந்து கூறுதல், மிக்க நலமாகும்.

வெறும் விஷய போகங்களுக்காக அவ்வர்று கூறுதல் நலனாகாது.

72 மனத்தை நிறுத்துவதில் அனேக சாதன முண்டு. ஆனாலும், அவைகளில் நிராசையே அவசியம் வேண்டப் படுகிறது.

73 கருமம் செய்பவர்களுக்கு ஆரம்பத்திலேயே ஞானோப தேசம் செய்வது, வளரும் செடியை ஆரம்பத்திலேயே முறிப்பது போலாகும்.

74 பலவீனத்தால் அறுபட்ட கயிற்றை எத்தனை முறை முடிசேர்த்து வைத்து உபயோகித்தாலும் முன்போல வேலை செய்யாது. ஞானியின் மனம் ஜகத்தில் எத்தனை முறை பிற ரால் பிரவிருத்திக்கப் படினும், அல்லது, பிராரத்தம் இழுத்துச் செல்லுமாயினும் முன்போல் ஸ்திரமாக நின்று வேலை செய்யாது.

75 சிறுவரும் ஞானிகளும் வியவகாரங்களில் ஒன்று போன் றவர்கள். ஒன்றும் நியமமாக இராது. கர்த்தவ்யமின்றி சந்தோஷமாக இருப்பர்.

76 சிறு குழந்தைகள் ரசம் நிறைந்த கனிகளை நன்றாகச் சுவைக்கத் தெரியாமல், கண்டபடி கீழும் மேலும் ஒழுக விடுவர். சிலரும், சிறுவர் போல அமைதி யற்றும் பிரஹ்மத் தியானத்தைச் செய்கின்றனர். இவர்கள் எப்படிப் பரம சுகம் பெற முடியாம்.

77 சுவானம் யாரைக் கண்டாலும் குலைக்கும். நல்லவர் கெட்டவர் தெரியாது. மனமும் எதிர்ப் பட்டதை யெல்லாம் நினைக்கும். இது நல்லது இது கெட்டதென அறியாது. ஆனால், நாய் தனது எஜமானனைக் கண்டபோது சத்த மெல்லாம் விட்டு உடல் குலுங்க உள்ளம் பூரிக்க சந்தோஷி க்கும். மனமும், உலகைத் துறந்து இறைவனை அடைந்த போது மற்றெல்லா வாசனைகளையும் விட்டுப் பரமானந்த த்தில் சாந்தமாக அமர்ந்து சுகம் பெறும்.

78 தத்துவக் கூட்டங்களுள் மனம் ஒன்று மாத்திரம் ஒழுங்கு பட்டால் மற்றவை யாவும் ஒழுங்காகும்.

79 பிறர் கூறும் பழி வார்த்தைகளையும், துதி வார்த்தைகளையும் சாதகன் காது கொடுத்துக் கேட்கலாகாது. அதனால், சித்தம் அதிக சஞ்சல மடையும்.

80 உத்தம அதிகாரி மண், பொன் இரண்டையும் அடியோடு நீக்கி வைப்பன். அதனால்தான் மனம் சாந்தி அடையும்.

81 நல்ல எண்ணங்க [ஆத்ம பாவனைக] ளை, அடிக்கடி உண்டாக்கச் செய்வதால், மனத்தின் உயரிய தன்மை சில சந்தர்ப்பங்களில் அப்பியாசிகளுக்கு வெளிப்படும். அதையறிந்து அதோடு விட்டு விடாமல் மீண்டும் மீண்டும் அப்பியாசம் செய்ய வேண்டும்.

82 மனித வாழ்க்கைக்கு அத்தியாவசிமான கருவி மனம். ஆனதால், மனத்தை எம் முயற்சியாலும் சுத்தமாக இருக்கச் செய்தால், வாழ்க்கை வெகு சுகமாக இருக்கும்.

83 தியானம் செய்ய உட்காரும் போது முதலில் மனத்தை சஞ்சல மில்லாத வழியில் பழக்கிப், பின்னர் விவேக வாயிலாகத் தியானம் செய்ய வேண்டும்.

84 பசுப் போன்ற மிருகங்கள் கட்டின இடத்தில் சும்மா இருக்கும். மான் போன்றவைகள் சும்மாயிராது. குரங்கும் அப்படியே அதிக சஞ்சலப்படும். சிலர் பசுப் போல தியானத்தில் சாந்தியாக இருப்பார்கள். சிலர் மான் போல சஞ்சல முடையவராவர். இன்னுஞ் சில தாழ்ந்தோர் குரங்கு போல அதிசஞ்சலராக இருப்பார்கள்.

85 உலகத்தைத் தன் கட்டளைக்குக் கீழ் அமைப்பதை விட, மனத்தை தன் கட்டளைக்குக் கீழ் அமைப்பவன்தான் உண்மையான அரசன்.

86 சில குதிரைகள் கண்ணுக்கு மாத்திரம் விபரீதமாகத் தோன்றியவைகளைக் கண்டால் மிரண்டு ஓடுகின்றன. இது போலச் சில மத வாதிகள், கண்களுக்குத் தங்கள் தேவதைகளின் சின்னங்களைக் காணாத விடத்து மிக்க பயமும் குரோதமும் உடையவராக இருக்கின்றனர்.

87 க்ஷேத்திரங்கள் யாவற்றினும் சிறந்தது சரீரமே யாகும்.

இதில், உள்ள கோசங்கள் 5-ம் பிரகாரம். இவைகளின் மத்தியில் இவைகளுக்கு அதிஷ்டானமாக உள்ள சச்சிதானந்த ஆத்மனே தேவதை. அனுபவ சாக்ஷாத்காரமே சுத்த சேவை.

88 தியானத்துக்குக் குணங்களும், அந்நியரது சேர்க்கைகளும் எவ்வளவு மிதமாக இருக்க வேண்டுமோ, அவ்வளவு உணவும் வார்த்தையும் மிதமாக இருத்தல் வேண்டும்.

89 ஆன்மானந்த அனுபவம்; நிராசையோடு உண்மையாக மனத்தை தண்டித்து அடக்குபவர்களுக்கு, சீக்கிரம் வெளியாகின்றது. மற்றையருக்கு அவ்வளவு சீக்கிரமாகச் சாத்யமாகின்ற தில்லை.

90 மனத்தை சங்கடமில்லாத வழியில், மிருதுவாகவும் சமாதான மாகவும் திருப்பி, ஆன்மாகார மாக்க வேண்டும்.

91 ஒரு காய், காலமின்றி இடையில் பழுத்திருந்தால் அதற்கு நிறமெல்லாம் நிலைகுலைந்திருக்கும். ஒருவன் அப்பியாசம், காலத்தில் பயன் தருவதன் முன்னே அவசரப்பட்டு கண்டபடி விபரீத முறையில் செல்வானாயின் அவனிடத்தே அனுபவம் சுகந்தராது போவதோடு துக்கமும் தரும்.

92 கிழங்குவேர், செடியோடு உள்ள போது மண்ணில் தான் இருந்தால் கெடாது. வேரை அறுத்து விட்டோமாயின் சில நாட்களில் அழுகி விடும். மந்திரம் லக்ஷியத்தைப் பற்றி நின்று ஜபிப்பதாயின் அம்மந்திரம் சில நாளில் பலன் தரும். லக்ஷியமின்றித் தாறுமாறாகச் ஜபிப்பதாலே சில நாட்களில் விட்டுப்போம்.

93 தியானம் கடினமான விஷயம். ஏன்? மனங் கரைந்து பிரஹ்ம மயமாக நிலைக்க வேண்டி யிருத்தலால்! ஆனால், தியானஞ் செய்து பழகி விட்டால், பின்னர் தியானத்தால் மனமடங்குவது, ஒரு கனிந்த பழத்தைப் பிழிவது போன்று அவ்வளவு சுலபமாகும்.

94 வேலியை ஒழுங்கு செய்து கொண்டு, விளைநிலங்களைக் கவனியாதவனுக்கு காலத்தில் பயன் கிட்டாது. கர்மங்களையே காலமுள்ளளவும் செய்து கொண்டு, ஞான

சாதனங்களைக் கைக்கொள் ளாதவனுக்கு மோக்ஷம் கிட்டாது.

95 சில கூட்டத்தார் ''நாங்கள், நல் யோகிகள், பாரம்பரி யத்தைச் சார்ந்தவர்கள், பாலும் பழமுந்தான் சாப்பிடுவோம்'' என்று பெருமையாகக் கூறுகின்றனர். எவ்வளவு அபிமானம்? பாபம்! இவர்கள் நன்மார்க்க வழி யின்னது என்று இன்னும் தெரிந்துக் கொள்ள வில்லை.

96 ''சகல யக்ஞங்களிலும் ஜப யக்ஞம் யான்'' என்று பகவான் 10-ம் அத்தியாயத்தில் கூறுகின்றார். இதன் சிறந்த தன்மை யாது? எனின், ஜப யக்ஞத்தால் சிறிதும் பாப மில்லை; மற்றவைகளிலுண்டு. பிரார்த்தனையும் ஜபமும் சித்தத்தை வெகு லகுவாக்கும். சீக்கிரமாகவும் தூய்மைப் படுத்துகின்றன.

97 பறக்கும் பருந்து ஜலத்தில் விழுந்தால் இறந்து விடும். மீன்கொத்திப் பக்ஷி ஜலத்தில் விழுந்து அதிலுள்ள ஜந்துக்களை புசித்துத் தான் ஜீவிக்க வேண்டும். உத்தம அதிகாரியாகிய அப்பியாசி, விஷய நீரில் விழுந்தால் அடியோடு கெடுவான். பாமரனுக்கு விஷய சாகரமே ஜீவனமாக இருக்கின்றது.

98 புத்தி திருந்தப் பெற்றவன் எங்குச் சென்றாலும் சுகந் தான். ஆனால், யாவும் தன் வடிவமாகக் கண்ட ஞானி ஒருவன் தான் பிறவியை விலக்கினவன்.

99 அதிகாரிகள், அடிக்கடி நூல்களையும் மற்றையரையும் எதிர்பாராமல், தங்கள் செய்கையையும், மனத்தின் நிலை மையையும் நாடி விசாரித்துத் திருத்திக் கொள்வது மேலான வழி. இதனால், சீக்கிரம் முன்னேற்ற மடையலாம்.

100 மனம் அடக்கமற்றவர் கடவுளை நேராகக் கண்டா லும் பெத்தரே யாவார்கள். மனம் அடக்கமுள்ளவர்கள் ஒரு துரும்பையும் கடவுளாகக் காண்கின்றார்களாதலின் அவர்களே முத்தராவர்.

101 பொது ஜனங்களுக்கு, எப்போதும் மத விஷயத்தில் ஒரே கொள்கை யிருக்கு மென்று கருதுவது கூடாத காரியம். தேசபேதத்தாலும், ஆதார, ஆசார பேதத்தாலும், மதமும்

நானா பிரகாரமே இருந்து வந்துள்ளன. இனியும் அப்படியே யிருக்கும். ஆனால், நல்ல விவேகியர் மாத்திரம், எந்தத் தேசத்தவராயினும் ஒன்று படுவார்கள்.

102 எல்லாங் கடவுளென்று சொல்லுவது ஜனங்களுக்குச் சகஜமாக இருக்கின்றது. எப்படி எல்லாங் கடவுளென்று கொண்டீர்கள்? என்று கேட்டால், அதற்குப் பதில் இல்லை ஏனென்றால், சொன்னபடி இரண்டொரு பொருளிலாவது உள்ளபடி கடவுளைக் காணாததால்தான்.

103 சிறு குழந்தை போன்ற சுபாவ முள்ளவருக்குத்தான் வேதாந்தம் நல்ல சாந்தியையும் அனுபவத்தையும் கொடுக்க வல்லதாகும். மற்றையருக்கு ஒரு நன்மையும் கொடுக்காது.

104 தியானம் செய்பவன், ஒரு நாள் குறிப்பிட்ட காலத்தில் தியாவஞ் செய்யாவிடின், அதனால் மனக் கிலேச பாரம் தோன்ற வேண்டும். அவன்தான் தியானப் பழக்கத்திற்குத் தக்கவனாகும்.

105 தியானஞ் செய்பவர் இடையிடையே மனம் சலிப் பதைக் கண்டு, பயமும், கிலேசமும் அடையாமல், எதிர்த்துச் செல்லும் மச்சங்கள் போல, விஷய சம்பந்தத்தால்தான் மனம் சலிக்கின்ற தென்பதைக் கண்டு, அவ் விஷயங்களை மித்தையாக நிச்சயஞ் செய்து அடிக்கடி ஆன்மா காரமாகப் பழகினால்மனம் நின்று விடும்.

106 யாரிடத்திலும் அடக்கமாயிரு. இது ஒரு பெரிய தவமாகும். உன் வேலையாளன், அவனினும் தாழ்ந்த பையன்கள், பெண்கள், யாரிடத்தும் தாழ்ந்து நடந்துகொள்.

107 கூட்டமுள்ள இடங்களுக்கும், விஷய சம்பந்தத்தில் அதிகப் பற்றுள்ளவர்கள் இடங்களுக்கும், ஒருபோதும் அப்பியாசி செல்லக் கூடாது. அதனால், பெருந் துன்பமும் மனத்தின் தளர்ச்சியும் உண்டாகும்.

108 தீயோடு தீ மோதினால் நஷ்டமில்லை. முன்னினும் நன்றாகச் ஜொலிக்கும். ஆனால், தீயோடு கையை மோதினால் கைக்குத்தான் தீமை யுண்டாகும். ஞானிகளோடு ஞானிகள்,

தங்கள் குற்றங்களைக் கண்டு தண்டித்துக் கொள்வார்கள். அதனால், அவர்களது ஞானம் முன்னினும் பிரகாசிக்கும். ஆனால், ஞானிகளைக் குற்றமுள்ளவராக, பாமரர் பாராட்டுவதால், அப் பாமர மக்களே துன்புறுவர்.

109 சிறுவர்கள் எதைக் கேட்டாலும் ''ஆம், முடியும்'' என்று சீக்கிரமாகக் கூறிவிடுவார்கள். காரியங்கள் ஒன்றும் செய்து முடித்து விட முடியாது. அது போல, சில வேதாந்த பண்டிதர்கள் ''நாங்கள் எல்லாம் விட்டு விட்டோம், எங்களுக்கு ஒரு பற்றுமில்லை'' என்று படித்த படி கூறிவிடுகிறார்கள். துக்கம் வரும்போது பாமரரை விட அதிக திண்டாட்ட மடைகின்றனர். இவர்கள் வாய் வேதாந்தம் அங்கு எள்ளளவும் பிரயோஜனப் படுவதில்லை.

110 ஒரு சுமை புல், ஒரு மூட்டை பருத்திக் கொட்டை என்று எழுதிக் காட்டினும், வாயால் கூறினும், பசுக்கள் அதைப் பொருட்படுத்தா. ஆனால், மனிதன் இன்றைக்கு ஒரு வேளை விருந்தென்று சொன்னால், நாக்கைத் தடவி ருசி பார்க்க இப்போதே எண்ணுகின்றான். எது மிருகம்? மனிதன் யார்?

111 விஷய சிந்தனை ஆரம்பத்தில் விளையாட்டாகவும், சுகம் போலவும் இருக்கும். பின்னர் பெருந்துன்பமாக முடியும். ஆத்மீக தெய்வ சிந்தனை அத்தகைய தல்ல.

112 சகலரும், தங்கள் தங்கள் வேதங்களையே சிறந்ததெனக் கொள்ளுகின்றனர். ஆனால், அவ் வெல்லா வேதங்களும், ஒரு தேவதையையே மூலமாக உடையதென அவர்கள் அறிகின்றதில்லை. சில அறிஞர்கள் அவ்வாறு உள்ளபடி அறிகின்றனர்.

113 ஒருவன் பலவகை ஆகாரங்களை அரைகுறையாகத் தின்று அஜீரண மடைவதை விட ஒரே ஆகாரத்தை நன்றாக மென்று தின்பது தேக மனங்களுக்கு ஆரோக்யமாகும். ஒருவன் நானா வேதசாரங்களையும், நானா நூல்களையும், பார்த்துப் பிரம்மை யடைந்து கெடுவதைப் பார்க்கினும், ஒரு குரு முகமாக ஒரு நூலை வாசித்து, அதன் முறைப்படியும், குருவின் வாக்கின் படியும், நடக்க இச்சிப்பது, அப்படியே நடப்பது, மிகச் சிரேஷ்டமாகும்.

114 தந்தையினிடம் பிள்ளைகள் பொருளை விரும்பி, சிரித்துக் கொண்டும், அழுது கொண்டும், வாதாடியும் கேட்ட பொருளை அடைகின்றார்கள். சாதகனும், ஆன்ம லாபத்தை விரும்பி, இறைவனை நோக்கி அழுது அவனை இடைவிடாது அன்பால் ஆராதிக்கும் போது, நாம் கேட்டுக் கொள்ளும், ஆன்ம லாப சம்பத்தை அவசியம் பெறலாம்.

115 துறவியின் வாழ்க்கையைக் கண்டு, சில அறிவுள்ள வர்கள் நாமும் அப்படி யாகலாம் என்று நினைக்கின்றார்கள்! விவேகம் செய்து பார்ப்பதால், துறவைக் கைக் கொள்ளுதல் கூடாது. விவேகத்தோடு, விடாப் பிடியான தீரம் நமக்கு உண்டா? என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். எவனுக்குத் தீரம் இருக்கின்றதோ அவன் ஆசரிக்கலாம்.

116 தோட்ட வேலைக்காரன் தோட்டத்தை நன்றாகக் கவனிக்கின்றான். அதற்கேற்ற சம்பளம் பெறுகின்றான். ஆனதால், அவன் அத்தோட்டத்துப் பழங்களை அனுபவிக்க ஏதுவில்லை. கருமம் செய்கின்றவன் அக் கருமங்களால் பயனை விரும்பி, அதற்கேற்ற வண்ணம் சுவல்ப பலனையும் அடைகின்றான். ஆனால், கர்மபல தாதாவான பரமானந்த இறைவனைச் சேர்ந்து, சுகமாக வாழ அவர்களுக்கு முடிகின்ற தில்லை.

117 நினைவே ஜெகத்தும் பந்தமு மானதால், நினைவை, அடியோடு அப்பியாசத்தால் தள்ள வேண்டும்.

118 அறிவில்லாதவர்களும் தெய்வ வழிபாடு செய்கின் றார்கள். ஆனால், அது சிறுவர் கல்யாண சடங்கை யொத்து நல்ல பலன் தருவ தில்லை.

119 ஒருவன், பிறருக்கு வாக்கால் செய்யும் உபதேசத்தை விட, நல் நடையால் செய்யும் உபதேசம் சிறந்தது.

120 அறிவீனர் சினேகம், எந்த வகையாலும் துன்பந் தருவது போல், தேகாபிமானம் எல்லா வகையாலும் துன்பமும், மீண்டும் மீண்டும் மலின வாசனையை நிரப்புவது மாகும்.

121 பக்தன் ஒருவன் கடவுளிடம் செய்யும் அன்பு உண்மை

யுடையதாயின், அவனிடத்துக் கடவுளின் உயரிய காக்ஷியோ அல்லது அவரின் உயரிய லீலையாகிய செய்கைகளோ, அவனுக்கு அவசியம் அனுபவ முண்டாகும்.

122 ஞான சாதகன், எப்போதும் பரிசுத்தமான எண்ணமும், செய்கையும் உடையவனாயிருக்க வேண்டும். இல்லையேல், இவன் செய்யும் அப்பியாச மனைத்தும் பாழ்த்துப் போகும்.

123 மனம் சுபாவமாக உயரிய பொருள். கவுரவம் வாய்ந்த சத்துவ குணமுடையது. ஆனால், மனிதன் புஷ்பத்தைக் கசக்கி முகரும் குரங்கைப் போன்று, அதை உலகப் பொருள் களில் தோய்த்துக் கசக்கித் துன்ப மயமாக்குகின்றான்.

124 பழத்தின் மணமும் ருசியும் மாறிவிடும். மலரின் மணம் மாறிவிடும். மிருக பலமும் குன்றி விடும். மனிதனது யௌவ னமும் அழகும் போய் விடும். உலகமும் பலவாறான மாறுதல்கள் அடையும். அதாவது காடு நாடாகும்; நாடு காடாகும். ஆனால், ஞானியின் ஆனந்த நிலை மாறாது.

125 உலக சிருஷ்டியைப் போல சம்ஹாரமும் இறைவனது லீலை. ஆனதால், மரணத்தைக் கண்டு பயப்படாது அன்போடு ஏற்பவன் தான் ஞானி.

126 அடங்கி மனமாகிய பெட்டியில் ஞானமாகிய செல்வம் நிறைந்திருக்கிறது என்பதை ஞானியும் கடவுளும் அறிகின் றனர். ஆனால், கடவுளுக்கு அதனால் லாபமொன்று மில்லை. ஞானி மாத்திரம் அந்த ஞானச் செல்வத்தை அனுபவிக்க பாத்யதை யுடையவனாவான்.

127 கவிகள் அனேகமாயிரம் ஞான நூல்களை நன்றாகப் பாடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு அதிலுள்ள நுண்ணிய பொருள் நன்றாக விளங்காதவராகவே இருக்கின்றனர். ஏனென்றால், அனுபவித்துப் பாடவில்லை! பாடம் படித்து நாவால் பாடத் தொடங்கி விடுகின்றனர். மனமாற சிந்தித்து வந்து பாடவில்லை.

128 கண், தன் சமீபத்திலுள்ளவைகளை அறிகிறதில்லை. தூரத்திலுள்ளவைகளையே காண்கின்றது. அனேகர் தன் மனத்திலுள்ள மலினத்தை அறிகின்றதில்லை. பிறரது மனக்

கோணலை அறிய விரும்புகின்றனர்.

129 பெண்ணையும் பொன்னையும் அருவருக்கத் தக்க உமிழ்நீர், குப்பைகளைப் போலாவாவது, திரணம் போன்றாவது, வெறுத்து உபேக்ஷித்த சாந்த புருஷனுக்குத் தியானம் செய்ய முடியும்.

130 மனித சரீரம் போன்று, தினந்தோறும் ஸ்நானம் முதலியவைகள் செய்தும், துர்நாற்றமும் வியாதியுமுடைய சரீரம் வேறெதுவுமன்று. இவ்வளவு அசுத்த சரீரத்தை விவேகி யெப்படித் தானென்று கருதுவான்:

131 மேய்ந்து கட்டுத் துறையில் தானாக நின்று கொண்டிருக்கும் பசுவிற்குக் கட்ட வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. பிராரப்த அனுசாரம் கிடைத்ததைப் புசித்து, சதா சாந்த சீலனாக ஆன்மாவில் ரமித்துக் கொண்டிருக்கும் மனத்திற்குத் தியானம் வேண்டுவதில்லை.

132 வைராக்யம் பூரணமாக உடையவன்தான், உலக விஷயத்தில் மயங்காமல் தியானம் செய்வதில் பலன் காண முடியும். மற்றையர்கள் எவ்வளவு காலம் தியானம் செய் தாலும் பயன் காண முடியாது.

133 இறைவனது திருவருளை என்நேரமும் நினைந்துருகு. குருபாதம் எப்போதும் துதி செய். உயிர்களுக்கிதமான வார்த்தைகளைப் பேசு. சத்திய வாழ்க்கையை கடைப்பிடி.

134 ஞானிக்கு, ஒரு முமுக்ஷு மோக்ஷத்திற்காக அதிதீவிரப் படுவதைக் கண்டால், ஜலமில்லாத கற்பாறையில் ஊத்தைக் கண்டது போலத் தோன்றும்.

135 மனக்கிலேசம் மகா துக்கமென்பது, சாதனம் செய்பவர்களுக்குத்தான் தெரியும்.

136 கருமமே பொருளாகக் கொண்ட சில வாதிகளும், ஆன்மா சரீரத்தினும் அன்னியமென்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால், சரீர அபிமானத்தை விடுவது அவர்களுக்கு இஷ்டமில்லை. அதனால், ஜனன மரண சங்கடமும் விடுபடுவ தில்லை.

137 பழத்தின் குணம் அம் மரத்தின் இலைகளிலும் விளங்கும். ஞானத்தின் பக்குவம் அச் சரீர மனங்களிலும் விளங்கும்.

138 சித்தத்திற்குத் தியானம் உணவாகக் கண்ட புருஷன் பாகிய உணவை விட்டாலும் தியானத்தை விட்டிருக்க மாட்டான்.

139 ஒரு புத்தகத்தின் உயர்வு அதன் வெளிப்பார்வைக் குரிய கட்டடத்தில் இல்லை. அதன் உள்ளுள்ள வாசகத்தின் உயர் நோக்கங்களை யனுசரித்து அப் புத்தகத்திற்கு உயர்வு உண்டு. ஒரு மனிதனது உயர்வு அவனது வெளிப் பார்வைக் குரிய வடிவத்தி லில்லை. அவனது உள்ளுறை மனத்தின் தூய ஞான எண்ணங்களையும் பொருத்து அம் மனிதனது உயர்வு உள்ளது.

140 சரீர மெடுத்தவன் எவ் வுலகத்தும் எவ் வாழ்க்கை யிலும் துன்பமே யடைகின்றான். ஆனால், பிரித்துப் பார்க்கும் விவேகி எவ் வுலகத்திலும் எவ் வாழ்க்கையிலும் சுகமாகவே வாழ்கின்றான்.

141 உறக்க மின்றியவர், மிக்க பிணியாளர், அதிகப் பசி யுடையவர், அதிகமாக உணவு உட்கொண்டவர், அதிக ஆசை, கோபம், லோபம் உடையவர், பெண்ணாசை யுடை யவர், சரீர அழகை எண்ணுபவர், பாமர துர்ச்சன சேர்க்கை யுடையவர். ஆகிய இத் தீய கூட்டுறவுடையவர்கள் எவ்வளவு காலம் தியானம் செய்தாலும் சாந்தி அடைய முடியாது.

142 கல்வி யறிவில்லாதவர்களும், பரமேஸ்வரனை அன்பு உவந்து வழிபடும் போது, அவ் வழிபாடு கருதிச் சம்மதமும், ஆன்றோர் கூறிய முறையும் ஆகிறது.

143 நீ சாந்த னென்பதை வாக்கால் சொல்வதை விட நடையால் நடந்துக்கொள். அதுதான் சரியான படிப்பாகும்.

144 பற்றற்ற வர்களுக்கு துக்கமே யில்லை. பற்றுள்ள வர்களுக்குச் சுகமே யில்லை.

145 மலையில் வாழும் மிருகங்கள் கூடத் தற்காப்பின்

நிமித்தம் வேண்டிய வகையில் ஆயுதம் போன்ற அவயவங்களை உடையனவாக இருக்கின்றன. சந்நியாசிகளுக்குத் தங்கள் பாதுகாப்பிற்கு இரு பெரிய கூர்மையான ஆயுதங்கள் வேண்டும். சாந்தம், விவேகம் இவ் விரண்டால் சகல சத்ருக் களையும் ஜெயிக்கலாம்.

146 ஞானம் ஒன்றுதான் பூரணச் செல்வம், மற்றைய செல்வம் நீங்கி விடும். ஞான பலமான முத்திச் சுகந்தான் பூரண இன்பம். மற்றைய இன்பம் க்ஷணத்தில் நாசமாகும்.

147 செடிகள் தம் பருவ காலங்களில் அவசியம் பூக்கின்றன. ஆனால், அவைகளின் காய், பழங்கள் செய்யப்படும் பக்குவத்திற் கேற்ற வண்ணமுண்டாகும். ஒருவனுக்குப் புண்ய வசத்தால் கடவுளைப் பற்றிய நினைவு உண்டா கின்றது. ஆனால், அந்த நினைவை மோக்ஷ பரியந்தம் சேர்ப்பிப்பது புருஷனது முயற்சி வலிவில் இருக்கின்றது.

148 மன அமைதி யுள்ளவர்களுக்கு இகத்திலும் பரத்திலும் சுகமுண்டு.

149 மனத் தூய்மையில் கடவுள் வழிபாடு எவ்வளவு அவசியம் என்பதை, தூய்மையைக் கடைப் பிடித்தவருக்கும், முத்தி விருப்ப முடையவருக்கும்தான் விளங்கும். தூய்மை யான மனம் எப்போதும் திருப்தியாக இருக்கும்.

150 பசுவின் சாணம் சாணமாக இருக்கும் போது தொடா தவர்கள் விபூதி யாகும் போது தொடுகின்றார்கள். தீமை யுடையவனைக் கண்டு அஞ்சுகின்றவர்கள் அவனே இறைவன் வழி பாட்டால் தூய்மை யடையின் சகலரும் விரும்பு கின்றனர்.

151 மழை ஒரே பிரகாரமாகத்தான் பெய்கிறது. நிலத்தின் பக்குவத்திற் கேற்றபடி பலனைத் தருகின்றது. அப்பலன் மழையினுடைய தன்று. இறைவன் கருணை ஒரே பிரகார மாகத்தான் இருக்கின்றது. சீவன்கள் மனப்பக்குவத்திற் கேற்ற வண்ணம், பலனடையப் படுகின்றது, அப் பலம் இறைவனது குற்றமல்ல.

152 அநுமான் சுக்கிரீவனுக்கு மந்திரியாக இருந்த போது

அவனது கௌரவமான மகிமைகள் ஒன்றும் வெளிப்பட வில்லை. அவ் வநுமான், இராமலக்ஷ்மணர்கள் சீதை இப்பரமேஸ்வரரோடு சேவை செய்யும் போதுதான் அவனது உயர்ந்த தன்மைகள் யாவும் வெளிப்பட்டன. மனம் உலகா னுபவ விவகாரங்களில் உள்ள போது அதன் தன்மைகள் ஒன்றுந் தெரிவதில்லை. அகமுகத்தான் ஆன்மாவைப்பற்றிய தியானத்தால் ஏகாக்ரமடையும் போதுதான் அதன் உயரிய தன்மைகள் வெளிப்படும்.

153 காய்ச்சிய பாலில் சிறிது தயிர் விடுவதால், அப் பாலெல்லாம் தன் மயமாக்கிக் கொள்ளுகின்றது. பரிபக்குவ மனதில், குரு உபதேசம் செய்ய, அவ் வுபதேசப் பொருள் வடிவமாகச் சீடன் விளங்குகின்றான்.

154 அப்பியாசிகள் கூடுமான வரையில் கண்டிப்பான முறைகளைக் கையாள வேண்டும். அதனால், மனம் சீக்கிரம் சமாதானமடையும். இல்லையேல் அதிகத் தொல்லைகளையும், எல்லை கடந்த ஆசைகளையும் புகுத்து மனம் சீரழியும்.

155 உலகிலுள்ள சகல இலௌகீக காரியங்களும், செய்த தையே செய்து வருவதால் நன்றாக இருப்பதில்லை. அடிக்கடி மாற்றி யமைப்பதால் நன்றாயிருக்கும் என்கி றார்கள் அது உண்மைதான். ஆன்மீக வாழ்க்கை அப்படிக் கல்ல! செய்து வந்த தியான விசாரங்களையே இடைவிடாது செய்து வரவர ஆனந்த மிகுதிப் பாடு உண்டாவதால். இத் தியான விசாரங்களை மாற்றி யமைப்பது கூடாததாகும். இதனால், இலௌகீக காரியங்களுக்கும், வைதீக காரியங் களுக்கும் முரண்பாடு உண்டு.

156 தெய்வ வழிபாடு; சாந்தமும் நிராசையு முள்ளவனுக்கு நல்ல பலனைத் தரும். மற்றையோருக்குச் சித்தத்தின் பக்கு வத்திற் கேற்ப பலம் தரும்.

157 மாணவன் பள்ளியில் தேருவதற்கு எவ்வளவு ஊக்கங் களைக் கொண்டு வாசிக்கின்றானோ, அவ்வளவு கடவுளிடம் அன்பு பூண்ட ஊக்கமிருக்குமாயின் வெகு சீக்கிரமாக ஞான மடைய முடியும்.

158 அனேக சமஸ்கார வாசனையால் மனம் சலிப்பதைக்

9031 R65

கண்டு தியானம் செய்பவன் கலங்க வேண்டாம். தீயைக் கண்ட யானைக் கூட்டம் போல, அவ் வாசனைகள் யாவும் திடமான ஞான சம்பந்த பக்தி ஆவேசத்தால் அடியோடு எரிந்து சாம்பலாகும்.

159 கனவில் கண்ட ஐஸ்வரியம், நனவில் பயன் படாதது போல், ஞான நனவில் விழித்தவனுக்கு நனவின் பொருள் பயன் படாது.

160 இரண்டு ஆடுகள் தலையை முட்டி இடிப்பதற்கு முன் பிரதமத்தில் பின்புறம் கொஞ்சம் சென்று பிறகு தான் வேகமாக வந்து தலையை இடித்துக் கொள்ளும். மனம் தியானம் செய்கிறவர்களுக்கு ஆரம்பத்திலேயே சமாதான மாகச் சாந்தம் அடைய மாட்டாது. முதலில் மூடனினும் மூடனாக வெகு சஞ்சல மடைந்து கீழே விழுந்து பிறகுதான் சீக்கிரம் முன்னேற்றம் அடைந்து நன்மையைப் பெறும். அது வரையிலும் பொறுத்திருத்தல் வேண்டும்.

161 சாது சங்கமும் சாஸ்திர சமஸ்காரமும் மோக்ஷத்திற்கு ஒரு சாதன மென்றாலும், இவை உணவிற்குச் சககாரி களான பருப்பு, உப்பு போன்றவையாகும். அன்னம் போல தியான விவேகமே நேரே சாதனமாகும்.

162 பிஞ்சு காய், நாளாகப் பழமாக மாறும். பழம் தன் முடிவில் நாற்றமுடைய அழுகலையே தோற்றுவிக்கும். நல்லவர்கள் தாங்கள் எவ்வளவு உயர்ந்த அனுபவமுடைய வராயினும், பிறரிடம் தான் பெரியானென்று கூறமாட் டார்கள். நான் சிறியவன், இன்னும் நன்மையைப் பெற வில்லை, பூரணமாக வில்லை யென்றே சொல்லுவர்; நினைப்பர். அதனால், ஒவ்வொரு நாளும் நலனில் முன்னேறிக் கொண்டே யிருப்பர். சில மதியீனர்கள் சிறிது பயனடைந்ததும் தாங்கள் மகான்கள் என்று கூறிக் கொண்டு வீணிலுழலுவர். அதனால் அவர்களுக்கு உரிய நாள் பாழடைந்தவராய் மூடரினும் மூடராவர்.

163 வேம்பின் காற்றும், நிழலும் மனிதனுக்கு நல்ல சுகத்தைத் தரும். ஆனால், அதனின் இலை முதலியவைகள் நேரே கசக்கி முகரவோ ருசிக்கவோ தகுதியாய் இராது. துக்கமாக இருக்கும். இறைவனின் சிருஷ்டியிலுள்ள இவ்

வுலகில் அபிமானமற்று அவன் திருவருளை இவ் வுலகின் மூலமாகப் பெறும் போது பரம சௌக்கிய மடையலாம். அவைகளில் அபிமானித்து முழுகும் போது பரம துக்கமாக முடியும்.

164 எட்டிப் பழத்தைப் போன்றவர் தாமதர். வேப்பம் பழம் போன்றவர் இராசதர். நெல்லிக்கனி போன்றவர் சாத்துவிகர்.

165 தரையில் முதலையானது, மற்றைய ஐந்துக்களால் வெல்லப்பட்டு அதனால் துன்பமடையும். நீரினுள் எவ்வித துஷ்டப் பிராணிகளையும் வென்று தான் சௌக்கிய மடையும். முமுக்ஷு உலகப் பாமரரோடு கூடிய காலத்து, அவர்களால் பல கிலேசமடைவான். பிரம்மானந்த சமுத்தி ரத்தில் மூழ்கித் தானாக மிஞ்சிய போது சகலரையும் தன் வடிவமாகக் கண்டு மயக்க மற்றவனாய் மூடாது. கிலேச மொன்றும் தன்னைத் தாக்காத நிலையில் நிலைத்துச் சுகியாக வாழ்வான்.

166 கண்ணுக்குக் கண்ணிமையினும், சீவனுக்கு ஈஸ்வரன் அதிக அன்பான பாதுகாப்பாளர் என்பதை நல்ல பக்தன் உணருவான்.

167 வறுமை, சம்பத்து யாவும், பக்தனுக்கு மிகப் பிரிய மானவைகளாகத் தெரியும். ஞானிக்கு யாவும் ஆன்மா வாகவே தோன்றும்.

168 பாமரர்களுக்கு யாது சுகமோ, அது விரக்தனுக்குத் துக்கமாகும். அது ஞானிக்கு உபேக்ஷைக்கு உரியதாகும்.

169 வாடின பயிர்களுக்கு மழை பெய்வதால் உண்டாகும் திருப்தி போன்று, நிராசை யுடையவனுக்கு குருவின் உபதேசம் திருப்தியைத் தரும்.

170. அகில் கட்டையை எவ்வளவு பெரிய தீயால் எரிக்கினும், தீய மனம் உண்டாகாது. நல்ல ஞானியருக்குப் பிறர் எவ்வளவு தீங்கியற்றினும் நன்மை செய்வாரன்றி அவர்களுக்குத் தீங்கை நினையார்.

171 ஞானமும், வைராக்யமும் நிர்ப் பயமானவை.

மற்றவை யனைத்தும் பயத்தோடு கூடினவை.

172 நாட்டின் உயர்வு உண்மையான தியாக உணர்வுடைய மக்களிடம் உண்டு. ஞானத்தின் உயர்வு உண்மையான நிராசை, தியானம், விவேகம் உடையாரிட முண்டு.

173 சிறுவர்கள் தங்கள் சரீரத்திற் கொவ்வாத உணவையும் விளையாட்டையும் இச்சிக்கின்றனர். அவர்கள் இச்சையின் வண்ணம் விடுவதால் சிறுவர்கள் கெடுவார்களல்லவா? மனமும் நன்மைக்கு எதிராக விஷய எண்ணங்களையும், தீய கூட்டுறவையும் நாடும். அதனிச்சைப்படி விடுவதால், விவேகியர் நல்ல பலமான மோக்ஷ சாம்ராஜ்யம் அடைய முடியாது.

174 பசி உள்ளவன் அன்னத்தை விரும்புவது போலவும், வெய்யிலில் தபிப்பவன் நிழலை விரும்புவது போலும், சமுசார தாபமுடையவன் மோக்ஷானந்த மடைந்து சுகமாகும் பொருட்டு, தியானத்தையும் விவேகத்தையும் விரும்புகின்றான்.

175 ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமகிருஷ்ணர் போன்ற மஹான்கள் காட்டிய ஞான வழியே முமுக்ஷுக்களால் கருதத்தக்கது. மற்றைய தந்திர மார்க்கங்க ளெல்லாம் ஒழுங்கீன மானவைக ளாதலால், நேரே சாதன மாகாது பரம்பரைச் சாதனமாகும்.

176 தியானத்தைச் செய்யும் அதிகாரிகள் உணவையும் வாக்கையும் அளவாக உபயோகிப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

177 சிலர் தாங்கள் கற்ற கல்வியையும், அல்ப விவேகத்தையும் போற்றி வருகின்றனர், பிறரறிய இடம்பமாகக் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் உள்ளவாறு ஆனந்த நிலையை அடைய வில்லை யென்பதை அவர்கள் மனத்தின் பிரதிநிதியான முகம் விளக்குகின்றது. சொல்லும் அப்படியே உள்ளது.

178 மாலைச் சூரியன் எவ்வளவு சுடினும் பின் பயன் தரும். ஆசை அணுவளவு சுடினும் அனர்த்தமே தரும்.

179 பக்தியுடையவன் தியானம், சீக்கிரம் முன்னேற்ற மடைகிறது. ஆனால், அவனும் மிக்க வருத்தப்பட்டு வாசனையைத் தள்ள வேண்டும்.

180 மணல்மேட்டில் நடப்பவன் படும் துன்பம் போன்றது உலக வாழ்க்கை வெய்யிலில் தபிப்பவன், குளிர்ந்த தடாகமும் சோலையும் நிறைந்த இடத்தை நாடிச் செல்வதைப் போன்றது ஞான சாதன வாழ்க்கை.

தத்வமஸி, அகம்பிரம்மாஸ்மி, பிரஜ்ஞானம்பிரம்மம்
அயமாத்மா பிரம்மம்.

மங்களம்.

! !

1 ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் — பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?

3 சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ? — பல
பித்த மதங்களிலேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?

7 சுவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டும் மறைகளெல்லாம் — நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு
அவங்கள் புரிவீரோ?

8 உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி
ஒளிர்ந்திடும் ஆன்மாவே — இங்கு
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ?

10 ஒன்று பிரமமுள துண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெலாம் — என்றும்
ஒன்று பிரமமுள துண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே.

— மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்.

உ

சிவமயம்

தான தருமங்கள் செய்க

அயன் மூலம் சர்வ வல்லமையும் சர்வ வியாபகமும் உள்ள இறைவனால் படைக்கப்பட்ட எழுவகையாம் சீவர் களுள்ளே மனித சரீரம் பெற்ற சீவர்களே: பகுத்தறிவு உடையவராய், மிக்கோராய் விளங்கா நிற்பர். ஆயினும் அருந்தல், பொருந்தல், இனவிருத்தி செய்தல் இதன் காரண மாகப் பயம், ஆசை ஆகிய வியவகாரங்களாம் இக லோக வாழ்க்கைக்குரிய வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள் வதில், அஃறிணை உயிர்களைக் காட்டிலும் பன்மடங்கு; உ ண வா லு ம், உடையாலும், உறைவிடங்களாலும், நிர்வாகத் திறமையினாலும், மற்றும், பல கண்டு பிடிப்புக் களுக்கு உதவும் விஞ்ஞானத்தாலும் மேம்பட்டிருக்கும் பகுத்தறிவு இருப்பினும்!? தோன்றிய நாம ரூபப் பொருள்கள் அனைத்தும் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருப்ப தற்கிடையே அனாதியாயும், வியாபகமாயும், சச்சிதானந்த மாயும், நாசமற்றதாயும் உள்ள ஒரு பரம்பொருள் ஆதாரமாக இருக்கின்றது. அதை ஆராய்ந்து பகுத்துப் பிரித்து அறிந்து அதுவே தனது உண்மை வடிவம் எனக் கண்டு அதில் நிலை பெற்றிருக்கும் வழியைச் சற்குரு சத் சாஸ்திரங் களால் சந்தேக விபரீத மறத் தெரிந்து அதில் திடம் பெற்று இருக்கும் தத்துவ ஞானிகளே உண்மையான பகுத்தறிவு வாதிகள் ஆவார்கள்.

அத்தகைய பெரியார்களே இந்தப் பிறவியிலேயே, இந்தச் சரீரத்தில் இந்த உலகத்தின் கண்ணே சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி ரூபப் பயனாம் சீவன் முத்தியும், பிறகு விதேக முத்தியையும் அடைபவர் ஆவார். இவர்களே செயற்கரிய செய்த பெரியர் ஆவர். (மற்றையர் துக்கங் கலந்த அற்ப இன்பங்களே பெற்று மனச் சாந்தி இன்றி அல்லல் உறுவர்.)

ஆனால், இப்படிப் பட்ட மேல் நிலையானது உலோப குணமுடையோர்க்குக் கிட்டாது!? எனினும், உலோப குணத்தைப் போக்கி ஈகைக் குணத்தை வளர்ப்பதற்கு சுலப மான வழி யாதெனில் கூறுதும்.

தாம் முயற்சியால் (நல் வழியில்) தேடிய பொருட்களை நமது இந்து மத தர்ம சாஸ்திரங்களில் கூறியவாறு ஈத (தியாகம் செய்த)லே ஆகும். இதனால் பாவங்கள் தேய்ந்து புண்ணியங்கள் பெருகி நாம் விரும்பும் பேரின்பம் பெற முடியும். இதனைத் திருவள்ளுவ நாயனார் "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது, ஊதியம் இல்லை உயிர்க்கு." எனவும்; மற்றும், "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தாளென்றாங்கு, ஐம்புலத்தாறு ஓம்பல் தலை." என்ற திருக்குறளில் கூறியபடி (அல்லது ரிஷி யக்ஞம், தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், மனுஷ யக்ஞம், பூத யக்ஞம் என்னும் வடநூல் வழக்குப்படி) பொருள் தியாகம் (ஈதல்) செய்வது ஒரு வகையும்.

நேரடியாகத் தக்கார்க்குத் தாமே விரும்பிக் கொடுத்தலைத் தானம் என்றும், பொதுப்படக் கொடுத்தலைத் தருமம் என்றும் இரு பிரிவையுடைய மற்றொரு வகையும் ஆகும்.

இந்த 2-ஆம் பிரிவின் விபரம் வருமாறு:- பெரிய செல்வந்தர்கள் கொடுக்கும் தானங்களின் விபரம்:-

1. சகஸ்ர தேனு (ஆயிரம் பசு) 2. கனக பர்வதம் (பொன் மலை) 3. சுவர்ண தேனு (பொன் பசு) 4. ஹிரன்ய கர்ப்பம் (பொன் சதுர்முகன்) 5. அக்கிரஹாரம் (பிராமணர்களுக்கு முதல் வரிசை வீடுகள்) 6. சாலங் கிருத ஹேம விருஷபம் (அலங்காரத்தோடு கூடிய பொற் காளை மாடு) 7. சாலங் கிருதி இலக்ஷிமி பிரதிமா (அலங்காரத்தோடு கூடிய இலட்சுமி உருவம்) 8. சாலங் கிருதி சப்த அசலம் (அலங்காரத்தோடு கூடிய ஏழுமலை) 9. சப்த சமுத்திரம் (ஏழு கடல்) 10. பஞ்சலாங்கல் (ஐந்து கலப்பை) 11. துலா புருஷம் (சரீர எடைக்கு எடை) 12. பூகோளம் (பெருநிலம்) 13. பூமி (சிறு நிலம்) 14. சுவர்ணம் (தங்கம்) 15. இரஜதம் (வெள்ளி) 16. இரத்னம் (வைரம்) 17. இரதம் (தேர்) 18. கஜம் (யானை) 19. அசுவம் (குதிரை) 20. கால புருஷ (இயமன் வடிவம்) 21. கிருகம் (வீடு) 22. தாசி (வேலைக்காரி) 23. கன்யா (பெண்) 24. வித்யா (கல்வி) 25. கோ (பசு) 26. மகிஷி (எருமை) முதலியனவாகும்.

மற்றையவர்கள் கொடுக்கும் தானங்களின் விபரம் வருமாறு:-

1. ஆஜ்யம் (நெய்) 2. தானியம் 3. வஸ்திரம் (வேட்டி புடவை) 4. குளம் (வெல்லம்) 5. திலம் (எள்ளு) 6. இலவனம் (உப்பு) 7. சையா (படுக்கை) 8. சயனம் (படுக்குமிடம்) 9. சத்ரம் (குடை) 10. உபநயணம் (பூநூல்) 11. புத்தகம் (நூல்) 12. பாத்திரம் (பித்தளை முதலியன) 13. சாலக்கிராமம் (விஷ்ணு அம்சமுள்ள நேபாள தேசத்துக் கல்) 14. பாணலிங்கம் (சிவ அம்சமுள்ள நர்மதா நதிக் கல்) 15. பாதுகா (பாதக்குறடு) 16. அந்நமிடல் 17. கிருஷ்ண அஜீனம் (கருமான் தோல்) 18. பிரம்ம தண்டம் மற்றும் பலவாகும்.

32 அறங் (தருமங்) கள் விபரம் வருமாறு:-

1. ஆதுலர்க்குச் (தரித்திரருக்குச்) சாலை 2. ஓதுவார்க்கு உணவு 3. அறுசமயத்தார்க்கு உண்டி 4. பசுவுக்கு வாயுறை 5. சிறைச் சோறு 6. ஐயம் (பிச்சையிடுதல்) 7. திண்பண்டம் நல்கல் 8. அறவைச் சோறு 9. அறவைத் தூரியம் (வாத்யம்) 10. அறவைப் பிணம் சுடுதல் 11. மகப்பெறுவித்தல் 12. மகவு வளர்த்தல் 13. மகப்பால் வார்த்தல் 14. சுன்னம் (சுன்னாம்பு) 15. நோய் மருந்து 16. வண்ணார் 17. நாவிதர் 18. கண்ணாடி 19. காதுஓலை 20. கண் மருந்து 21. தலைக்கு எண்ணை 22. பிறர் துயர் காத்தல் 23. தண்ணீர்ப் பந்தல் 24. மடம் 25. தடம் 26. சோலை 27. ஆ உரிஞ்சு தறி 28. விலங்கிற்கு உணவு 29. ஏறு விடுத்தல் 30. விலை கொடுத்து உயிர் காத்தல் 31. காகத்திற்கு உணவிடல் 32. கஸ்தூரி கொடுத்தல் முதலியனவாகும்.

மேலே கூறிய வாற்றால் அவரவர் சக்தி (பொருளாதார) அனுசாரம் தான தருமங்கள் செய்ய வேண்டியதாயிற்று. இவைகளைத் திரிகரணங்களால் பலனைக் கருதி (காமியமாக) ச் செய்யின், இக பரபோக பாக்கியங்களும், பலனைக் கருதாது ஈஸ்வரார்ப்பணமாக (நிஷ்காமியமாக) ச் செய்யின் அந்தக் கரண சுத்தி வாயிலாக மேலே கூறிய படி

சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்த்தி (அடைவு) ரூபப் பயனை (முத்தியை) ப் பெறலாம்.

சீவர்கள், தங்களுக்கு நல் ஊழ்வினை காரணமாகப் பொருந்தும் செல்வச் சூழ்நிலை உள்ள போதே ஷெ தான தருமங்களைச் செய்யா விட்டால் வரும் கேடுகளைப் பற்றிக் கூறுமிடத்து:–

ஒரு தாஸியானவள் தன் தோழியைப் பார்த்து செல்வந்தர்கள் நமக்குப் பொன்னையும் பொருளையும் கொடுப்பதோடு சரீர சுகத்தையும் கொடுத்து நமது பாதத்தையும் வணங்குவது ஏன்? என்றாள்.

அதற்குத் தோழியானவள், "செம்மையில் (செல்வம் உற்ற காலத்தில்) அறம் செயாதார் திரவியம் சிதர வேண்டி, நம்மையும், சூதும், கள்ளும் நான்முகன் (பிரம்ம தேவன்) படைத்தவாறே'' எனக் கூறினாள். என விவேக சிந்தாமணியில் கூறியது மட்டுமல்லாமல், இக் காலத்தில் கிரிமினல், சிவில் வழக்கையும், தீராத நூதன நோய்களும், திருடனும், திடீர் விபத்துக்களும், தீப்பிடித்தலும் முதலியன சேர்த்துக்கொள்வதும் பொருத்த மாகும்.

மற்றும்,

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையே — மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. - என்னும் வெண்பாவில்

ஔவையார் கூறுவதாவது:-

இவ்வுலகின் கண்ணே அநேக ஜாதிப் பிரிவுகள் இருந்தாலும் அவைகள் உண்மையான ஜாதிகள் அல்ல!? செல்வம் உற்ற காலத்தில் பட்டாங்கி (வேதத்தி) ல் உள்ள நீதி வழுவாத தான தருமங்கள் செய்பவர்களே மேல் ஜாதி மற்றையர் கீழ் ஜாதி. ஆக இரண்டே சாதிகள் தாம் உள்ளன என்று கூறியிருப்பது கண்டு கருதற்பாலது.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்.'' அதாவது, அழியும் இயல்புடைய செல்வம் பிராரப்தானுசாரம் பெற்ற அக் காலத்தே அழியாத தான தருமங்கள் செய்யவேண்டும் என்பதாம். அவ்வறிவாம் என்னாது அறம்செய்க மற்றது, பொன்றுங்

கால் பொன்றாத் துணை'' ஷ தர்ன தருமங்களைக் கடைசி காலத்தில் செய்யலாமென்று எண்ணாது, வாய்ப்பும் வசதியும் உள்ள போதே செய்க. அதனால், வரும் புண்ணியம் மரணத்திற்குப் பின்னும் சீவர்களைத் தொடர்ந்து வந்து மறுமையிலும் மறு பிறப்புக்களிலும் சுகத்திற்கேது வாயிருக்கும் என்பதாகும்.

ஆகவே அவரவர் சக்தி அனுசாரம் சுருதி ஸ்மிருதிகளில் கூறியுள்ள இந்தத் தான தருமங்களைத் தெய்வ நம்பிக்கை யோடு செய்பவர்களுக்கு இக பர சுக போகங்களை அடை வதற்கு உரியன இறைவன் திருவருளால் கிட்டும். இது மெய்யே. (சத்தியமே.)

பன்னிரு வாக்கியங்கள்

1. அன்னை தந்தை ஆசிரியர் அன்பைப் பெறுக.
2. ஆலயம் செல்க ஆண்டவன் அருளைப் பெறுக.
3. இந்து மதத்தை நம்புக இதர மதங்களை நம்பற்க.
4. ஈகைக் குணத்தைக் கொள்க ஈயாக் குணத்தை வெல்க.
5. உன்னிச் செயல் படுக உன்னத வாழ்வைப் பெறுக.
6. ஊழையும் நம்புக அதனை உடைக்கும் முயற்சியும் செய்க.
7. எதிர்பாராத் தன்மையே எதிர்பாரா இன்பம் நல்கும்.
8. ஏமாற்றம் செய்யற்க ஏமாந்து போகற்க.
9. ஐயம் இட்டு உண்க ஐயம் கெட்டு வாழ்க.
10. ஒருமை மனம் பெறுக ஒன்று பட்டு வாழ்க.
11. ஓம்பொருளை உணர்க ஓங்கிய வாழ்வைப் பெறுக.
12. ஔவை வழி செல்க தவ்வை வழி செல்லற்க.

வேணும் ஸ்ரீ சற்குருநாதன் துணை.

சோம - கோபால சுவாமி,
ஆனந்தாஸ்ரமம்,
குமாரபாளையம்.

அறிவிப்பு.

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் நமது ஆனந்தாஸ்ரமத்தில், கோவிலூர் மரபு தவத்திரு சோம - கோபால சுவாமி அவர்களால், மாலை 7-00 To 8-00 மணி வரை தினந்தோறும் கோவிலூர் மடம் வேதாந்த சம்பிரதாய பாடங்களான, 1. நாநா ஜீவ வாதக் கட்டளை, 2. கீதா சாரத் தாலாட்டு, 3. சசிவன்ன போதம், 4. மகாராஜாத் துறவு, 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம், 7. இலட்சணு விருத்தி, 8. வேதாந்த சூடாமணி, 9. கைவல்லிய நவநீதம் 10. விவேக சூடாமணி, 11. ஸ்ரீமத் பகவத் கீதை, 12. ஸ்ரீமத் ஈசுவர கீதை, 13. ஸ்ரீமத் பிரம்ம கீதை, 14. அஞ்ஞவதைப் பரணி, 15. பஞ்சதசி, 16. ஸ்ரீஞான வாசிட்டம் ஆகிய 16 சாஸ்திரங்களும், வரிசைக் கிரமமாக நடத்தப் படுகின்றன. ஆன்மீக நாட்டமுள்ள அனைவரும் இந்த அரிய வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்த இலட்சியங்களில் முக்கிய இலட்சியமான சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி ரூபப் பயனும் வீடு பெற்றுய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இப்படிக்கு,

J. K. K. முனிராஜா

J. K. K. முனிராஜா,
M. Tech (London, U. K.)
தொழில் அதிபர்,
உபதலைவர், ஆனந்தாஸ்ரமம்,
குமாரபாளையம்.

உ

அத்வைத சங்கு முழக்கம்

1. செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர் அவர்சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம் !

2. இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்,
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங்கு ஊதேடா சங்கம் !

3. பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே,
ஐயுற லின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம் !

4. மையுறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற் றிருந்தாரே,
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்களா மென்றிங் கூதேடா சங்கம் !

மகாகவி — சி. சுப்பிரமணிய பாரதியார்.